# நிதி நிலை அறிக்கை

## 2026 – 2027

நிதி, திட்டம் மற்றும்
வளர்ச்சித் துறை அமைச்சர்

முனைவர் **நெ. மரிய வில்சன்**
அவர்களின் உரை

திருவள்ளுவர் ஆண்டு-2057, ஆடித் திங்கள் 20 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள்

**தமிழ்நாடு அரசின் நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ.மரிய வில்சன் அவர்கள், 2026-27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராசர், அண்ணல் அம்பேத்கர், இராணி வேலு நாச்சியார், மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் ஆகிய எங்கள் கொள்கைத் தலைவர்களுக்கு வணக்கம் செலுத்தி, ஆட்சி அதிகார, நிர்வாக நிலைகளில் எங்களை வழிநடத்தும் மக்கள் நலன் சார்ந்து மக்களாட்சி நடத்திய, மாபெரும் மக்கள் தலைவர்களான பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். போன்ற ஆளுமைகளை தன்னகத்தே கொண்ட பெருமைவாய்ந்த இப்பேரவையின் முன், 2026-27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை வைப்பதில் நான் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன். தனக்கு எல்லாமும் கொடுத்த தன் மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக மட்டுமே அரசியலுக்கு வந்தவர்

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தான் உயிராக நேசிக்கும் மக்களுக்காக, தன்னை உயிராக நேசிக்கும் மக்களுக்காக, பல்வேறு சூழ்ச்சிகளை எதிர்த்து மாபெரும் சரித்திர வெற்றிபெற்று '**ஜனநாயகனாக**', இப்பேரவையில் வீற்றிருக்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை வழிநடத்தி, ஆலோசனைகளை வழங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல அரசைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே சிந்தித்து, அயராது பாடுபடும் மக்கள் விரும்பும் தலைவர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்மறை தந்த தலைமகன் திருவள்ளுவரின் காலத்தை வென்ற வாக்கினை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து எனது உரையை தொடங்குகிறேன்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்**

(குறள் – 972)

பிறப்பின் அடிப்படையில் அனைவரும் சமம். ஆனால் செய்யும் செயல்களின் அடிப்படையில்தான் அவரவர் சிறப்பு இயல்புகள் வேறுபடுகின்றன.

2. '**பிறப்பால் அனைவரும் சமம்**' என்ற உயரிய சமத்துவக் கோட்பாட்டுடன், ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களிலேயே அளப்பரிய பல சாதனைகளைப் புரிந்து, ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளையாக, அண்ணனாக, தம்பியாக, உயிராக, உறவாக, உணர்வாக வாழும் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன் நெஞ்சில் குடியிருக்கும் தமிழக மக்களுக்கு நன்மை தரும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

3. தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் இதுவரை காணாத ஒரு சரித்திர நிகழ்வினை, மாபெரும் மக்கள் புரட்சியினை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள். அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூகநீதி, சமத்துவம், பெண்கள் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு, ஊழலற்ற, நேர்மையான, வெளிப்படைத்தன்மை உடைய அரசு, ஆகிய உயரிய கோட்பாடுகளுடன் தொடங்கியுள்ள இந்த ஆட்சியானது, கடந்த மூன்று மாதங்களில் இவற்றைச் சொன்னது மட்டுமின்றி, செய்தும் காட்டியுள்ளது. இதுமட்டுமல்ல, உண்மையான சமூகநீதி மற்றும் நேர்மையான நிர்வாகத்தை

ஒரு கொள்கையாகவே கொண்ட ஆட்சி இது என்பதை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் உணரத் தொடங்கி உள்ளனர்.

4. இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் மக்களுக்கு, விலையில்லாமல் வழங்கப்படும் மின்சாரத்தை 200 யூனிட்டுகளாக உயர்த்தி வழங்கி, மின் நுகர்வோரின் மாதச் செலவைக் குறைத்தது, விவசாயப் பெருமக்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்தது, குறுவை சிறப்புத் தொகுப்பை வழங்கியது, பெண்கள் பாதுகாப்பினை உறுதிசெய்யும் '**சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை**' உருவாக்கியது, தமிழ்நாட்டில் வேரூன்றியிருந்த போதை கலாச்சாரத்தினை ஒழிக்க மாவட்டந்தோறும் போதைப் பொருள் தடுப்புச் சிறப்புப் பிரிவை உருவாக்கியது, கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பேருந்து நிலையங்களுக்கு அருகில் பொதுமக்களின் அன்றாட வாழ்விற்கு இடையூறாக அமைந்திருந்த 717 சில்லறை விற்பனை மதுபானக் கடைகளை மூடியது, அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கான '**தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை**' பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளான

செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட உள்ளது என நமது அரசு பொறுப்பேற்ற நாள் முதல், இந்த குறுகிய காலத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பல துறைகளில் கணிசமான முன்னேற்றங்களும், மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் பல முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

5. தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி என்பது, ஒரு கட்சியின் தனிப்பட்ட வெற்றி அல்ல. ஒட்டுமொத்த தமிழக மக்களின் வெற்றி அது. மக்களுக்கான பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்தில், நமது அரசு, அறம், பொருள் மற்றும் இன்பத்தை நோக்கமாக வைத்து பத்து தூண்களைக் கொண்ட '**வெற்றித் தமிழகம் – தொலைநோக்குத் திட்டங்கள்**' ஆவணத்தினை வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில், திட்டங்களை, அடுத்து வருகின்ற முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் ஆண்டிற்குள் நிறைவேற்றத்தக்க திட்டங்களாக வகைப்படுத்தி, அவற்றுக்கான செயல் வடிவம் கொடுத்து வருகின்றது. தேசிய அளவில் பல சமூக-பொருளாதாரக் குறியீடுகளில் முன்னணியில் விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு பல ஆண்டுகளாக இருந்து வரும் நிலையில்,

தமிழ்நாட்டை வறுமையில்லாத, செழுமை மிகுந்த, அனைவருக்கும் சமவாய்ப்பினை வழங்கி அதன் மூலம் சமூகநீதியினை நிலைநாட்டும் மாநிலமாகவும், 2036 ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாகவும் உயர்த்தத் தேவையான சமூக-பொருளாதார மற்றும் மனிதவள முதலீடுகளை மேற்கொள்வதற்கு நமது அரசு உறுதிபூண்டுள்ளது.

6. இந்தத் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் வகையில், அரசு, '**வெற்றித் தமிழகம் – தொலைநோக்குத் திட்டங்கள்**' கொள்கை ஆவணத்தில் இடம்பெற்றுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்தும். இதில் பெண்களுக்கு அதிகாரமளித்தல், நிர்வாகத்தை மேம்படுத்துதல், அனைவருக்கும் வீடு, பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல், சமூகநீதியினைக் காத்தல், பசுமைப் பரப்பினை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த முன்னுரிமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கை, உண்மையான தொலைநோக்குத் திட்டங்களை அடைவதற்கான பாதையை வழிவகுத்துக் காட்டும்.

7. தமிழ்நாட்டின் கடனளவானது கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் இருமடங்காக உயர்ந்து பத்து இலட்சம் கோடி ரூபாய் என்ற அளவில் இருப்பதனை, நமது அரசு ஆட்சி அமைத்த உடன் வெளியிட்ட '**நிதி மேலாண்மை குறித்த வெள்ளை அறிக்கையின்**' மூலம் தெளிவுபடுத்தி உள்ளோம். மேலும், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சொந்த வரி வருவாயின் விகிதம், வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை என பல்வேறு நிதிநிலைக் குறியீடுகளில், தமிழ்நாடு மற்ற இணை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மொத்த வரி வருவாயில் வட்டி செலுத்துவதற்கான தொகையும், பொறுப்பேற்றுக்கொண்ட செலவுகளும், தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாக, புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு கிடைக்கும் நிதி ஆதாரம் என்பது குறைவாகவே உள்ளது.

8. இத்தகைய ஓர் இக்கட்டான சூழ்நிலையில், மக்களால் தேர்வு செய்யப்பட்ட நமது அரசானது, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றும் அதே வேளையில், மாநிலத்தினை இந்த நிதி நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு

பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வருகிறது. முதலாவதாக, பொது டெண்டர்களில் காண்டிராக்டர்களிடமிருந்து கேட்கப்படும் தேவையற்ற சான்றிதழ்களின் கட்டாய சமர்ப்பிப்பு, அந்த டெண்டர்களை போட்டியில்லாதவாறு மாற்றியுள்ளன. இதனைக் களைந்து, நமது அரசு டெண்டர்களில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வந்துள்ளது. இரண்டாவதாக, பல அரசுத் துறைகளில், அந்தத் துறையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காண்டிராக்டர்கள் மட்டுமே டெண்டர்களில் பங்கேற்கமுடியும் என்றிருந்த நிலையை மாற்றி, எந்த ஒரு துறையிலும் பதிவு செய்துள்ள காண்டிராக்டரும் தகுதியிருப்பின், மற்ற துறைகளின் டெண்டர்களிலும் பங்கேற்க முடியும் என்ற நிலையை அரசு கொண்டு வந்துள்ளது. மூன்றாவதாக, இளைஞர்களும், சிறுதொழில் செய்பவர்களும் அரசின் டெண்டர்களில் முதன்முறையாகப் பங்கேற்க ஏதுவாக, குறைந்த மதிப்புள்ள டெண்டர்களில் உள்ள பல்வேறு விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள், புதிய மற்றும் வளர்ந்து வரும் காண்டிராக்டர்களுக்கு அரசின் டெண்டர்கள் எளிதில் கிடைக்க வழிவகுக்கும். அதே நேரத்தில், டெண்டர்களில் ஏற்படும் ஆரோக்கியமான போட்டியின்

காரணமாக அரசின் வீண் செலவுகளும் குறையும். இந்த முன்முயற்சிகளின் பலன்கள் அனைத்தும் அரசிற்கு கிடைக்கப் பெறவும் தொடங்கிவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. நமது அரசு பொறுப்பேற்பதற்கு முன், டெண்டர்களின் மதிப்பீடுகளில் ஒரு பெரும்பகுதி சில தனிநபர்களுக்கும், சில கட்சிகளுக்கும் செல்வதை முழுமையாகத் தடுத்து நிறுத்தி, ஒப்பற்ற சாதனையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார். மேலும், பலஅடுக்கு மற்றும் உயரமான அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டுவதற்கான திட்ட அனுமதியினைப் பெற அரசிடம் வர வேண்டும் என்ற நிலையையும் நமது மாண்புமிகு முதலமைச்சர் மாற்றியுள்ளார். இந்த அனுமதியினை அதிகாரப் பகிர்ந்தளிப்பின் மூலம் (Delegation of Powers) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிலையிலேயே பெற்றுக் கொள்ள ஆணையிட்டுள்ளார். இதன் மூலம், திட்ட அனுமதியினைப் பெறுவதற்கு நிலவி வந்த ஊழலை முற்றிலுமாக அகற்றியுள்ளார். '**மக்களின் வரிப் பணத்தில் இருந்து ஒரு பைசாவும் தொட மாட்டோம், தொட விடமாட்டோம், தொட்டால்**

**விடமாட்டோம், இதற்கு முன் தொட்டவர்களையும் விடமாட்டோம்'** என்பதில் உறுதியாக இருக்கும் நமது மாண்புமிகு முதலமைச்சரைக் கண்டாலே, அவரின் பெயரைக் கேட்டாலே, ஊழல்வாதிகள் அஞ்சி நடுங்கி ஓடி ஒளிவதை நாம் தினந்தோறும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

10. இவ்வாறு பொது டெண்டர்கள் மற்றும் திட்ட அனுமதிகளில் நேர்மையான மற்றும் வெளிப்படைத் தன்மை உடைய நிர்வாகத்தின் மூலம் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ள நமது அரசானது, நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான முன்முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இவற்றின் ஒருபகுதியாக, மதுபான உற்பத்தியாளர்களுக்கான கூடுதல் சிறப்புக் கட்டணத்தை அரசு அண்மையில் விதித்துள்ளது. இதன்மூலம், அரசிற்கு ஓர் ஆண்டிற்கு ஆயிரம் கோடி ரூபாய் வரை வரவு எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல, சரக்கு மற்றும் சேவை வரிகளில் நேரடித் தொடர்பற்ற (Faceless) மதிப்பீடு, பதிவுத் துறையில் நேரடித் தொடர்பற்ற (Faceless) பத்திரப் பதிவு, சுரங்க நடவடிக்கைகளைக் கண்காணிக்க முழுமையான கணினிமயமாக்கல் (End-to-End Computerization) எனத்

தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் பல முன்னெடுப்புகளை அரசு எடுத்து வருகிறது. இதன் மூலம், அரசிற்கு கூடுதலாகக் கிடைக்கும் வருவாய் ஏறத்தாழ 15,000 கோடி ரூபாய் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பல வெற்றித் திட்டங்களை செயல்படுத்த முடியும்.

11. பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து செல்லக்கூடிய வருவாய் வளர்ச்சியை அடையவும், வருவாய் ஆதாரங்களை விரிவுபடுத்தி, நிலைத்தன்மையுடன் பராமரிக்கவும், மாநிலத்தின் வரி மற்றும் வரி அல்லாத வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்காக, ஒன்றிய திட்ட ஆணையத்தின் முன்னாள் துணைத் தலைவர் திரு.மாண்டேக் சிங் அலுவாலியா (Thiru. Montek Singh Ahluwalia) அவர்களின் தலைமையில் 5 உறுப்பினர்களைக் கொண்ட '**வருவாய் மேம்பாட்டுக் குழுவை**' (Revenue Augmentation Committee) அரசு அண்மையில் அமைத்துள்ளது. இதன் மூலம், மாநிலத்தின் நிதி சுயாட்சியை வலுப்படுத்தி, அதன் சமூகப் பொருளாதார வளர்ச்சிக் கடமைகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும்.

**பள்ளிக் கல்வி**

12. கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

(குறள்-400)

"**கல்வியே ஒருவருக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வமாகும்**". கல்வி கற்றலில் சிறந்து விளங்கி வெற்றி பெற்றவர்களுக்கு நற்சான்றிதழ்களையும், உதவித்தொகையும் வழங்கி கௌரவிப்பவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவரது தலைமையிலான அரசானது, 43 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் அரசுப் பள்ளிகளை நிர்வகித்து வருகிறது. இந்தப் பள்ளிகளில் தூய்மையான மற்றும் பாதுகாப்பான கற்றல் சூழலை உறுதி செய்வது என்பது, மாணவர்கள் தரமான கல்வி பெறுவதற்கும், அவர்களின் நலனுக்கும் இன்றியமையாததாகும். தற்போது அரசுப் பள்ளிகளில் தொழில்முறை தூய்மைப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான ஒருங்கிணைந்த நடைமுறை இல்லாத நிலையை கருத்தில் கொண்டு, '**சூப்பர் க்ளீன் சூப்பர் கேம்பஸ்**' (Super Clean Super Campus) திட்டத்தினை அரசு செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ், தினசரி தூய்மைப் பணிகள், குடிநீர் வசதிகள்

மற்றும் கழிப்பறைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகங்களுக்கு 24 மணி நேர பாதுகாப்பு ஆகியவை உறுதி செய்யப்படும். இதன் மூலம், நமது சூப்பர் CM ஆட்சியில் சூப்பர் Safety, சூப்பர் Student மற்றும் சூப்பர் Campus உறுதிசெய்யப்படும். முதற்கட்டமாக 10,000 பள்ளிகளில் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்திற்காக 2026-27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 139 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

13. தமிழ்நாட்டின் குழந்தைகளின் தாய்மாமனாகிய, நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிநடத்தும் அரசு இது. தமிழ்நாட்டின் குழந்தைகளுக்குத் தரமான கல்வியைப் போலவே, தரமான கல்விக்கூடங்களும் அவசியம் என்பதை இந்தத் தாய்மாமனும், அவரது அரசும், உணர்ந்தே இருக்கிறது. மாநிலம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளை நவீனமயமாக்கும் நோக்கத்தில், பரிந்துரை செய்யப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான ஒரு '**பள்ளி நிறைவுத் திட்டம்**' அறிமுகம் செய்யப்படுகிறது. 2,514 தொடக்கப் பள்ளிகள், 365 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 855 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

என மொத்தம் 3,734 பள்ளிகளில் 2,132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

14. சமூக-பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பின்னணியில் இருந்து வரக்கூடிய, கல்வித் திறன்மிக்க மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்கும் நோக்கத்தில் **பெருந்தலைவர் காமராசர் சிறப்புப் பள்ளிகள்** - நவீன உண்டு உறைவிடப் பள்ளிகளை நமது அரசு நிறுவிடும். 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பயிலும் இப்பள்ளிகளில், கல்வி, உணவு, தங்குமிடம், பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் அவர்களுக்கு விலையில்லாமல் வழங்கப்படும். இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

15. வேகமாக மாறிவரும் உலகளாவிய மற்றும் தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ப, பள்ளிக்கல்வியின் பாடத்திட்டத்தை அனுபவ-

ஆய்வு அடிப்படையில், எதிர்காலத் தலைமுறையினருக்கான, திறன் சார்ந்த, முழுமையான கல்வியாக மாற்றியமைப்பது காலத்தின் கட்டாயமாகும். இத்துடன், பகுத்தறிவுச் சிந்தனை, படைப்பாற்றல், நிதிசார் அறிவு, பாலின சமத்துவம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, கணினித் திறன், போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் திறன் மற்றும் உலகளாவிய குடியுரிமைப் பண்பு (Global Citizenship) ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு துடிப்பான மற்றும் முற்போக்கான பாடத்திட்டம், எதிர்காலத்திற்கு ஏற்ற தலைமுறையினரை உருவாக்க அவசியமாகிறது. தமிழ்நாட்டை கற்றல் வெளிப்பாடுகளில் முதன்மை மாநிலமாக உருவாக்கும் நோக்கத்தில், **பள்ளிப் பாடத்திட்டத்தை மறுசீரமைக்க இந்த அரசு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது**.

16. **'Say No to Drugs'** என்று சொன்னவர், என்றென்றும் அதைச் சொல்பவர், நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். '**Drugs-ஐ விடு Sports-ஐ எடு**' என்றும் சொன்னவர் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கும் நமது இலக்கானது, பள்ளிகளிலிருந்தே தொடங்குவது மிகவும் அவசியமானதாகும்.

‘**இளமையில் கல்**’ என்ற ஔவையாரின் ஆத்திச்சூடிக்கேற்ப, போதைப்பொருட்கள் மற்றும் அவற்றின் தவறான பயன்பாடு குறித்த விழிப்புணர்வும், முன்னெச்சரிக்கைக் கல்வியும், இளம் தலைமுறையினரின் மனங்களில் பசுமரத்தாணியாய்ப் பதியச் செய்யப்பட வேண்டும். இதற்கான முன்னெடுப்பின் கீழ், பள்ளிகளில் போதைப்பொருள் எதிர்ப்பு அமைப்புகளும், தன்னார்வக் குழுக்களும் அமைக்கப்படும். மேலும், இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 10581 என்ற உதவி எண்ணைப் பள்ளி வளாகங்களில் தெளிவாகக் காட்சிப்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது. மேலும், மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் தகவல் தெரிவிக்க ஏதுவாக, ‘**போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு**’ (Drug free Tamil Nadu) என்ற செயலியின் மூலம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாடு குறித்த தகவல்களை பகிரும் வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது.

17. தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்களை, மாநில அளவிலான டிஜிட்டல் நூலகங்களாக மறுவடிவமைப்பதன் மூலம்,

டிஜிட்டல் அறிவு, ஒற்றை உறுப்பினர் சேர்க்கை, 24x7 இணையம் மற்றும் கைபேசி வாயிலாக அணுகும் வசதி, டிஜிட்டல் உள்ளடக்கம், இலவச வைஃபை வசதி மற்றும் 38 மாவட்ட மைய நூலகங்களில் இணை-பணியிட வசதிகள் கொண்ட கற்றல் மற்றும் புத்தாக்க மையங்களாகச் செயல்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக, பொது நூலகங்களை மறுவடிவமைப்பதற்கு இந்த அரசு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

18. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 2026-27 ஆம் கல்வி ஆண்டில் 11-ம் வகுப்புப் பயிலும் சுமார் 5.32 இலட்சம் Gen-Z / இளம் தலைமுறை மாணாக்கர்களுக்கு **277 கோடி ரூபாய் மதிப்பீட்டில்** ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் வசதிகளுடன் கூடிய **நவீன பிராண்டட் மிதிவண்டிகள்** வழங்கப்பட உள்ளது. தன்னை உயிராக நேசிக்கும் Gen-Z தலைமுறையை தலைசிறந்த தலைமுறையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதன் வெளிப்பாடே இந்த மேம்படுத்தப்பட்ட செயல்திட்டம்.

19. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வித் துறைக்கு 44,527 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**உயர்கல்வி**

20. தமிழ்நாடு நீட் தேர்வினை கடுமையாக எதிர்க்கிறது. நீட் தேர்வில் தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு குளறுபடிகள் மற்றும் வினாத்தாள் கசிவு ஆகியவை எதிர்காலத் தலைமுறையினரின் உயர்கல்வி வாய்ப்பினை பெரிதும் பாதிக்கின்றன. எனவே, நீட் தேர்வு முறையினை உடனடியாக இரத்து செய்து முந்தைய முறையான பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வின் அடிப்படையில் மருத்துவக் கல்விக்கான சேர்க்கையை தொடர்ந்திட ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்துகிறது.

21. கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினி என்பது ஓர் இன்றியமையாத தகவல் தொழில்நுட்பச் சாதனமாக உள்ளது. நாளுக்கு நாள் மேம்பட்டு வரும் இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில் தங்கள் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்

கொள்ளவும், திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை பெற்றுக் கொள்ளவும், சிறப்பான வழியில் தங்கள் நேரத்தினை பயன்படுத்துவதற்கும், மாணவர்களுக்கு மடிக்கணினி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதனை உணர்ந்த நமது அரசு, கல்லூரி மாணவர்களுக்கான '**வெற்றி மடிக்கணினித் திட்டத்தைச்**' செயல்படுத்தும். 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலான இத்திட்டம் கல்லூரி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் ஒரு கருவியாக அமையும்.

22. "**கல்வி கரையில, கற்பவர் நாள் சில**" என்ற நாலடியாரின் காலத்தால் அழியாத ஞானத்தை வழிகாட்டியாகக் கொண்டு, போதிய வசதியற்ற வாழ்க்கைச் சூழலால் எந்தவொரு மாணவரின் கற்றலும் தடைபடாதிருப்பதை உறுதி செய்வது நமது தலையாய கடமையாகும். மாநிலம் முழுவதும் மாணவர் தங்கும் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், 10 கோடி ரூபாய் ஆரம்ப மூலதனத்துடன் '**தமிழ்நாடு மாணவர் தங்கும் விடுதி மற்றும் உட்கட்டமைப்பு நிறுவனம்**' (TNSHIC) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) ஒன்றை நமது அரசு அமைக்கும். '**TN-SUDAR**' (மாணவர் குடியிருப்புகளின் மாநில

அளவிலான மேம்பாடு, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்) என்ற முதன்மைத் திட்டத்தின் கீழ், முக்கியக் கல்வி மையங்களில் ஒரு இலட்சம் நவீன படுக்கை வசதிகளுடன் கூடிய 200 ஒருங்கிணைந்த மாணவர் விடுதிகள் கட்டப்படும். சுமார் 3,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அரசு-தனியார் கூட்டாண்மை (PPP DBFOT) மாதிரியின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கு மாநில அரசின் 20 சதவீத கட்டுமான மானியம் (அடுத்த இரண்டு நிதியாண்டுகளில் 640 கோடி ரூபாய்) வழங்கப்படும். இத்திட்டம், பரவலாக உள்ள தங்குமிடங்களை ஒருங்கிணைந்த, உயர்தர வசதிகள் கொண்ட வளாகங்களாக மாற்றியமைக்கும். இவ்வளாகங்களில், முழுமையாகக் குளிரூட்டப்பட்ட டிஜிட்டல் கற்றல் மையங்கள், 24 மணி நேரப் பாதுகாப்பு, சுகாதாரமான சமையலறைகள் மற்றும் முழுமையான சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கும் வகையிலான தானியங்கி ஒதுக்கீட்டு முறை ஆகியவை இடம்பெறும். வரும் ஆண்டுகளில், பல்வேறு சமூகங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த இளைஞர்களை 'TN-SUDAR' திட்டம் ஒன்றிணைக்கும்.

23. 2027-28 ஆம் கல்வியாண்டில் மதுரையில் சீர்மிகு சட்டப்பள்ளி தரத்தில் மேம்பட்ட சட்டக் கல்வி வழங்க, சிறப்பு அரசு சட்டக் கல்லூரி 300 மாணவர்களின் சேர்க்கையுடன் தொடங்கப்படும். இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்கு 8,393 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு**

24. பெட்ரோலியப் பொருட்களின் மீதான தேவையைக் குறைப்பதற்கும், சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுப்பதற்குமான ஒரு நடவடிக்கையாகவும், வாகன மெக்கானிக்குகள் மற்றும் வாகனப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்கள், மின்சார வாகனங்களையும் பழுதுபார்க்கும் வகையில், மின்சார வாகனங்கள் மற்றும் மின்கலன்களின் பராமரிப்பு குறித்த பயிற்சி வழங்கப்படும். அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில், 12,500 வாகன மெக்கானிக்குகள் உட்பட மொத்தம் 22,500 நபர்கள் இத்திட்டத்தின் வாயிலாக பயனடைவர். இத்திட்டத்திற்காக, நடப்பு நிதியாண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

25. தமிழ்நாட்டு இளைஞர்கள், உலகளவில் உருவாகி வரும் புதிய வேலைவாய்ப்புகளைப் பெறுவதை சாத்தியமாக்கும் வகையில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் **செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரவழி கற்றல்** (AI and ML) என்ற புதிய தொழிற்பிரிவு 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும். இத்தொழிற்பிரிவு, ஆண்டுக்கு 10 தொழிற்பயிற்சி நிலையங்கள் வீதம், 5 ஆண்டுகளில் மொத்தம் 50 தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகம் செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம், ஐந்தாண்டுகளில் 24,000 மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற வழிவகை செய்யப்படும். மேலும், **5 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் 90 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் நிறுவப்படும்**. இதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

26. மாநில அரசின் போட்டித் தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சி வகுப்புகள் தற்போது

ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வு ஆணையம், இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கும் விரிவுபடுத்தப்படும். அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களின் மூலம் SSC, RRB, IBPS போட்டித் தேர்வுகளுக்கான கூடுதல் பயிற்சி வகுப்புகளை நடத்த 3.38 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

27. தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிநவீன திறன்களைப் பெறுவதை உறுதிசெய்து, அவர்களை வேலைவாய்ப்புக்குத் தகுதியுடையவர்களாக உருவாக்குவதுடன், அவர்களிடையே தொழில்முனைவு ஆர்வத்தையும் வளர்க்கும் நோக்கில், இந்த அரசு '**வெற்றித் திறன் பயிற்சித் திட்டத்தை**' அறிமுகப்படுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 12 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கும், ஒரு இலட்சம் வேலையில்லா இளைஞர்களுக்கும் தொழில்துறை தேவைக்கேற்ப திறன் பயிற்சிகள் வழங்கப்படும். மேலும், அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, முதற்கட்டமாக 20,000 இளைஞர்களுக்குப் பணியிடப் பயிற்சி வழங்கப்படும். இப்பணியிடப்

பயிற்சிக் காலத்தில், பட்டதாரிகளுக்கும் தொழிற்கல்வித் தகுதி பெற்றவர்களுக்கும் மாத உதவித்தொகை வழங்கப்படும். நிரந்தர வேலைவாய்ப்பு இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

28. செயற்கை நுண்ணறிவை எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில்நுட்பப் புத்தாக்கத்திற்கும் உந்துசக்தியாகக் கருதி, இந்த டிஜிட்டல் மாற்றத்தில், தமிழ்நாட்டை முன்னணியில் நிலைநிறுத்திட நமது அரசு உறுதிபூண்டுள்ளது. இத்தொழில்நுட்பப் புரட்சியின் முதன்மைப் பயனாளியாக நமது இளைஞர்கள் திகழ்வதை உறுதிசெய்யும் வகையில், '**செயற்கை நுண்ணறிவு தொழில் வளர்ச்சித் திட்டம்**' (AI Industry Development Program) தொடங்கப்படும் என்பதை நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ், உயர் கல்வியின் பல்வேறு நிலைகளுக்கேற்பத் தனித்துவமான செயற்கை நுண்ணறிவுப் பாடத்திட்டங்களை வடிவமைக்க கல்வியாளர்கள் மற்றும் தொழில் துறை முன்னோடிகள் கொண்ட நிபுணர் குழு

ஒன்று அமைக்கப்படும். சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT-Madras) உள்ளிட்ட நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களுடனான நோக்கம் சார்ந்த கூட்டாண்மைகளையும், உலகத் தரத்திலான நவீன பயிற்சி உள்கட்டமைப்புகளையும் பயன்படுத்தி, 2031-ஆம் ஆண்டிற்குள் பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 5 இலட்சம் இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு திறன் பயிற்சி அளித்து, உலகத் தரத்திலான, ஆற்றல்மிக்க மனிதவளத்தை உருவாக்க நமது அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

29. செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் உலகை மாற்றியமைத்து வரும் சூழலில், இந்தத் தொலைநோக்குப் பார்வையைச் செயல்படுத்தும் விதமாக, '**செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ் மற்றும் இணையக் கருவிகள் குறித்த அறிவுக்கான தமிழ்நாடு பள்ளித் திட்டம்**' (TN SPARK) விரிவுபடுத்தப்படவுள்ளது. இத்திட்டம் தற்போதுள்ள 5,000 அரசுப் பள்ளிகளிலிருந்து கூடுதலாக 2,600 பள்ளிகளுக்கு 2026–27 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்படும்.

புதிதாக மறுசீரமைக்கப்பட்ட மூன்று நிலைகளைக் கொண்ட கட்டமைப்பின் கீழ், 6 முதல் 8-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இத்துறை சார்ந்த அடிப்படைப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும். 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இடைநிலை அளவிலான பயிற்சியும், 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்குச் சிறப்பு விருப்பப் பாடங்களும் வழங்கப்படும். இக்குறிக்கோள் சார்ந்த முயற்சியானது, மாணவர்கள் புதியனவற்றைப் படைக்கவும், தலைமைத்துவப் பண்பை வளர்த்துக்கொள்ளவும், உலகளாவிய அறிவுசார் பொருளாதாரத்தில் தமிழ்நாட்டின் நிலையை வலுப்படுத்தவும் நேரடியாக உதவும்.

30. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு 2,022 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு 17,150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு**

31. சமூகத் தீமைகளுக்கு எதிரான நமது வலுவான கேடயமாக, ஒரு துடிப்பான விளையாட்டுப் பண்பாடு திகழ்கிறது. உடற்தகுதியை ஊக்கப்படுத்தும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற "Start Run, Stop Drugs" போதைப்பொருள் எதிர்ப்பு ஓட்டத்தில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரில் பங்கேற்று, ஆயிரக்கணக்கான இளைஞர்களுடன் தோளோடு தோள் நின்று, மூன்று கிலோமீட்டர் ஓடி, இந்த நோக்கத்தை மிக ஆற்றலுடன் வெளிப்படுத்தினார்கள்.

32. "**விளையாட்டை ஏற்போம், போதைப்பொருளைத் துறப்போம்**" (Sports ஐ எடு, Drugs ஐ விடு) என்ற செய்தியை முன்வைத்து, தவறான போதைப் பழக்கத்திற்குப் பதிலாக விளையாட்டு ஒழுக்கத்தையும், சமூகப் பொறுப்பையும். இளைஞர்களிடையே விதைக்கும் விதமாக, ஒரு '**ஒருங்கிணைந்த இளைஞர் மேம்பாட்டுத் திட்டத்தை**' இந்த அரசு தொடங்கும். தேசிய மாணவர் படை (NCC), நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) போன்ற முக்கிய இளைஞர் அமைப்புகளை, மருத்துவம், காவல் மற்றும் சமூக நலத் துறைகளுடன் ஒருங்கிணைத்து, இளைஞர்களின்

ஆற்றலை விளையாட்டு, சமூக சேவை மற்றும் நலவாழ்வு போன்ற ஆக்கப்பூர்வ செயல்பாடுகளின் திசையில் நமது அரசு அவர்களை வழிநடத்திக் கொண்டு செல்லும். "**அனைவருக்கும் விளையாட்டு, அனைத்து இடங்களிலும் விளையாட்டு**" என்பதன் மூலம், நமது கல்வி நிறுவனங்கள் பாதுகாப்பானதாகவும், முற்றிலும் போதைப்பொருள் அற்ற புகலிடங்களாகவும் திகழும்.

33. ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வெல்வதை நோக்கமாகக் கொண்டு, சர்வதேச அளவில் விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை உச்சத்திற்குக் கொண்டுசெல்ல நமது அரசு உறுதிபூண்டுள்ளது. சிறந்த திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்காக, **10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள்** மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டு, இதற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விளையாட்டில் ஆர்வமும், திறமையும் கொண்ட 8 முதல் 18 வயதிற்கு உட்பட்ட இளம் பள்ளி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் வழங்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் 500 வீரர்களுக்கு நிதியுதவி வழங்கக் கூடுதலாக 22 கோடி ரூபாய்

நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளை உலக அரங்கிற்கு கொண்டுசெல்லும் '**தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள்**' நடத்த 42 கோடி ரூபாயும், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த 2 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

34. உலகத்தரம் வாய்ந்த வெற்றியாளர்களை உருவாக்குதல் மற்றும் இளைஞர்களுக்கு இடையே ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதியைப் பேணும் பண்பாட்டை வளர்த்தல் ஆகிய இருமுனை அணுகுமுறையின் மூலம்தான் உண்மையான விளையாட்டு வளர்ச்சியை அடைய முடியும். விளையாட்டு என்பது நமது பள்ளிகளிலிருந்தே தொடங்கப்பட வேண்டும். தற்போது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிற்கும் வாரத்திற்கு இரண்டு விளையாட்டுப் பாடவேளைகள் மட்டுமே உள்ளன. இந்நிலை மாற்றப்பட்டு, பள்ளி நேரத்திற்குப் பிறகு தினமும் ஒரு மணி நேரம் முறைப்படுத்தப்பட்ட விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள்

மற்றும் வசதிகள் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் வழங்கப்படும். இது மாணவர்களின் உடற்தகுதி, சிந்தனைத் திறன் வளர்ச்சி, கூட்டுச்செயல்பாடு மற்றும் ஒழுக்கத்தை வலுப்படுத்துவதுடன், மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சாதனை படைக்கக்கூடிய திறமை கொண்டவர்களைக் கண்டறிவதற்கும் வழிவகுக்கும். மேலும், விளையாட்டை பொதுமக்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில், அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அருகாமைப் பகுதிகளில் விளையாட்டு வசதிகள் (Neighbourhood Sports Facilities), சிறிய உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் விளையாட்டு வளாகங்கள் உருவாக்கப்படும். இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டிலிருந்து நடக்கும் தூரத்தில் விளையாடுவதற்கான உட்கட்டமைப்பு வசதியை உருவாக்குவதன் மூலம், ஆரோக்கியமான, சுறுசுறுப்பான மற்றும் ஒழுக்கமிக்க தலைமுறையை நாம் உருவாக்குவோம்.

35. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 1,051 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சமூகநீதி**

36. சொல் அல்ல முக்கியம். செயல், செயல், செயலே முக்கியம் என்று முழங்கியவர் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அதனை சமூகநீதித் துறையின் செயல்பாட்டில் காட்டி வருகிறார். புகழ்பெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்படும் '**அண்ணல் அம்பேத்கர் அயல் நாட்டுக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்**' மூலம், ஒரு மாணவருக்கு அதிகபட்சமாக 36 இலட்சம் ரூபாய் வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது. நடப்பாண்டில், இத்திட்டத்தின் கீழ் 362 மாணவர்கள் பயன்பெறும் வகையில், முன்னெப்போதும் இல்லாத அளவில் 131 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

37. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதையும், நிலையான வளர்ச்சியையும் உறுதிசெய்ய '**வெற்றி தொழில் முனைவோர் திட்டம்**' செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், பயனாளிகள் மொத்தத் திட்டச் செலவில் மூலதன மானியமும், வட்டி மானியமும் பெற ஏதுவாக, நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

38. '**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்**' மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கிடையே தொழில் முனைவுத்திறனை ஊக்குவிக்கும் நோக்கில், மூலதன மானியம் மற்றும் கடன் வழங்கப்பட்டு, அத்தொழில் முனைவோருக்கு ஆதரவு அளித்து, அவர்களின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தன்னிறைவை உள்ளடக்கிய வளர்ச்சியினை அடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 165 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

39. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண் விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் நோக்குடன், '**மண்ணின் மகள்**' திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு விவசாயம் செய்திடத் தேவையான நவீன தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும். திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

40. நகர்ப்புர மற்றும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளில், அவர்களின் முழுமையான சமூகப் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் எனும் நோக்கத்தில், '**அயோத்திதாசப் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்**' செயல்படுத்தப்படும். ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்புகளை விரிவாக மேம்படுத்துவதிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், இத்திட்டம் முழுமையாக கவனம் செலுத்தும். திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

41. பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள், வாழ்வாதாரத் திட்டங்கள், சுகாதாரக் கட்டமைப்புகள், கல்வி நலன் சார்ந்த உதவித்தொகைத் திட்டங்கள், பள்ளி மற்றும் விடுதி மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதி மேம்படுத்தும் நோக்கில், '**ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டம்**' செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் 250 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், பழங்குடியினர் குடியிருப்புகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

42. ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் 25,225 கோடி ரூபாயும், பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின் கீழ் 2,079 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகநீதித் துறைக்கு 3,937 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்**

43. தந்தை பெரியாரை கொள்கைத் தலைவராக ஏற்றவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சமூகநீதி என்று சொல்லி ஏமாற்றுபவர் அல்ல நம் தலைவர். சமூகநீதியை உணர்வுபூர்வமாக

ஏற்றவர். அதனால்தான் அவரின் தலைமையிலான நமது அரசானது, தமிழ்நாட்டில் சமூகநீதியைக் காப்பதில் உறுதியுடன் உள்ளது. தமிழ்நாட்டின் 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள், பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியை எவ்வித தடையுமின்றி தொடர்ந்திட, 372 கோடி ரூபாய் பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகைக்காகவும், 77 கோடி ரூபாய் 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்திற்கும், 13.41 கோடி ரூபாய் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு மாணவிகளுக்கு வழங்கும் ஊக்கத்தொகைக்காகவும் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சிறுபான்மையினர் நலன்**

44. **மதச்சார்பற்ற சமூக நீதி அரசாகவும்**, சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு முன்னோடி மாநிலமாகவும் தமிழ்நாடு திகழும். சிறுபான்மையின மாணவர்களுக்குக் கல்வி

உதவித்தொகையினை இந்த அரசு தொடர்ந்து வழங்கும். தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டி மூலம் முதல்முறையாக **புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு வழங்கப்படும் 25,000 ரூபாய் மானியம் நமது அரசால் 35,000 ரூபாயாக உயர்த்தப்படும்**. கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 1.05 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கூடுதலாகத் துவக்கப்படும். மேலும், கபர்ஸ்தான்கள், கல்லறைத் தோட்டங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 34 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். சிறுபான்மையினரைப் பாதுகாப்பதிலும், அவர்களின் நலன்களிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளவே செய்யாது.

45. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

46. மாற்றுத்திறனாளிகளை மகத்தான திறனாளிகளாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனதார எண்ணுகிறார். '**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்**' என்ற நமது அரசின் சமத்துவக் கொள்கையின் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள், சமத்துவம் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

47. தற்போதுள்ள உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் இடம்பெறாத செயற்கை நுண்ணறிவு சார்ந்த நவீன உதவி உபகரணங்களான விளையாட்டு செயற்கை கால், மின்தசை சமிக்ஞை மூலம் செயல்படும் மேல்கை செயற்கை அவயம் மற்றும் பிற உயர்தர உதவி உபகரணங்கள் மற்றும் கோக்ளியர் இம்ப்ளான்ட் பேட்டரி போன்ற உயர்வகை உபகரணங்களை வாங்குவதற்காக, அதன் விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் 30,000 ரூபாய் வரை நிதியுதவி வழங்கப்படும்.

48. தஞ்சாவூர், திருவண்ணாமலை, சேலம், கடலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில், அறிவுசார் குறைபாடு உடையோருக்கான அரசு நிறுவனங்கள் '**நம்பிக்கை இல்லம்**' என்ற பெயரில் அமைக்கப்படும். இந்நிறுவனங்களில், மூன்று வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வி, ஆரம்பகால பயிற்சி சேவைகள், மறுவாழ்வு மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்படும். தொடக்க நிலையில், ஒவ்வொரு நிறுவனமும் 50 மாணவர்கள் பயிலும் பகல்நேரப் பள்ளியாக செயல்பட்டு, பின்னர் தங்குமிட வசதியுடன் கூடிய நிறுவனமாக மேம்படுத்தப்படும். இதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நான்கு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

49. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு 1,485 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாடு**

50. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் அண்ணனாகவும், தம்பியாகவும் இருந்து, அவர்களுக்கு எப்போதும்

துணை நிற்பவர்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். திருமணம் என்பது ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் ஓர் மகிழ்ச்சியான தருணமாகும். இத்தருணத்தைக் கொண்டாடும் விதமாக, தமிழ்நாட்டின் பெண்கள் அனைவரையும் தன் குடும்பத்தில் ஒருவராகக் கருதும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அப்பெண்களின் திருமண நன்னாளில் நமது அரசின் சார்பாக எட்டு கிராம் தங்க நாணயமும், ஒரு பட்டுப் புடவையும் '**அண்ணனின் சீராக**' வழங்கவிருக்கிறார். இத்திட்டத்தினைச் செயல்படுத்த திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 812 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

51. நம்முடைய கொள்கைத் தலைவர் பெருந்தலைவர் காமராசர் மதிய உணவுத் திட்டத்தினை கொண்டு வந்து, மாணவர்களின் வயிற்றுப் பசியை மட்டுமின்றி கல்விப் பசியையும் போக்கினார். நண்பா மற்றும் நண்பிகள் மேல் பேரன்பு கொண்ட நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு '**பெருந்தலைவர் காமராசர் காலை உணவுத் திட்டம்**' எனப் பெயர் சூட்டி, பெருந்தலைவருக்குப் பெருமை சேர்த்துள்ளார். ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு

உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு இத்திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தி உள்ளார். தந்தை பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தின் மூலம், கூடுதலாக 15,414 பள்ளிகளில் பயிலும் 15.14 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவர். இத்திட்டத்திற்கு திருத்த வரவு-செலவு மதிப்பீடுகளில் 710 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

52. மூத்த குடிமக்களுக்குக் கண்ணியமான வாழ்க்கை, மகிழ்ச்சியான முதுமை மற்றும் விரிவான சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்து, முதியோருக்கு உகந்த சூழல் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. மூத்த குடிமக்களுக்கான அனைத்து அத்தியாவசிய வசதிகளுடன் கூடிய **மூத்த குடிமக்கள் இல்லங்கள்**, தகுதிவாய்ந்த பராமரிப்பாளர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் மாவட்டந்தோறும் விரிவுபடுத்தப்படும். முதலாமாண்டில், 12 மாவட்டங்களில் 12 முதியோர் இல்லங்கள் நிறுவப்படும். ஒவ்வொரு இல்லத்திலும் 40 பயனாளிகள் இடம்பெறுவர். இத்திட்டத்திற்காக 6.6 கோடி ரூபாய்

நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், நூலகங்கள், யோகா, தியான வகுப்புகள் மற்றும் உள்ளரங்க விளையாட்டு வசதிகளுடன் கூடிய **மூத்த குடிமக்கள் பொழுதுபோக்கு மையங்கள்**, முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் நிறுவப்படும். மூத்த குடிமக்களின் மக்கள்தொகை அடிப்படையில் இம்மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

53. எதிர்காலத் தலைமுறையான, நம் வீட்டுக் குழந்தைகளின் வாழ்வு கொண்டாட்டமாக இருக்க வேண்டும் என்று மனதார விரும்பும் உள்ளம் கொண்டவர் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். விஜய் மாமா விஜய் மாமா என பாசம் பொங்க அழைக்கும் குழந்தைச் செல்வங்களைப் பற்றி நாள்தோறும் சிந்திப்பவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அக்குழந்தைகள் தினமும் வரும் அங்கன்வாடி மையங்களில் அவர்களுக்கான ஆரம்பகால பராமரிப்பு மற்றும் சேவையை நல்ல முறையில் வழங்கிடும் பொருட்டும், மையத்திற்கு வரும் குழந்தைகள் மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத்துடனும் இருப்பதை உறுதி செய்திடும் பொருட்டும், பாதுகாப்பான குடிநீர், கழிவறைகள், மின்சார இணைப்பு உள்ளிட்ட

அடிப்படை வசதிகளை உள்ளடக்கிய, 500 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் நடப்பாண்டில் கட்டப்படும்.

54. திருநர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பை உறுதிசெய்யும் வகையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) மூலம் பல்வேறு தொழில்களில் திறன் பயிற்சி வழங்கப்படும். மேலும், அவர்கள் தொழில் தொடங்குவதற்கும். நிலையான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் மானியத்துடன் இணைந்த வங்கிக் கடன் வசதியும் வழங்கப்படும். நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ஐம்பதாயிரம் ரூபாய் வரை சுயதொழில் மானியத்துடன் வங்கிக் கடன் பெற ஊக்குவிக்கப்படுவார்கள். சமூக மற்றும் குடும்பச் சவால்களை எதிர்கொள்ளும் திருநர்களுக்குப் பாதுகாப்பான தங்குமிடம், உணவு, ஆலோசனை மற்றும் மறுவாழ்வு ஆதரவை வழங்குவதற்காக 5 மாவட்டங்களில் '**அரண்**' தங்குமிட வசதிகள் நிறுவப்படும். மேலும், கல்வி, வேலைவாய்ப்பு. மருத்துவ சிகிச்சை, தேர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக பிற நகரங்களுக்குப் பயணம் செய்யும் திருநர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்

வகையில், 15 மாவட்டங்களில் குறுகியகால தங்குமிட வசதிகளும் நிறுவப்படும்.

55. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 9,818 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு**

56. தாய் மற்றும் குழந்தை நல பராமரிப்பு, தமிழ்நாட்டின் பொது சுகாதார அமைப்பின் முக்கிய தூணாக விளங்குகிறது. சமீபத்திய தேசிய மாதிரி பதிவு அமைப்பின் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் ஆயிரம் பிறப்புகளுக்கு 11 ஆக உள்ளது. இது தேசிய அளவில் மிகக் குறைந்த விகிதங்களில் ஒன்றாகும். அரசு தொடர்ந்து பொது சுகாதாரத் துறையில் செயல்படுத்திய திட்டங்களால் மட்டுமே இது சாத்தியமானது. இதற்குச் சான்றாக, மாநிலத்தில் 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இவற்றில் 53 சதவீதத்திற்கும் மேற்பட்ட பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. அரசு

மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, இதன் மூலம் மருத்துவத் தேவைகளுக்காக பொதுமக்கள் சொந்தமாகச் செலவிடும் தொகையைக் குறைக்கும் நோக்கில், அரசு '**தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை**' செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், குழந்தையின் பிறப்பைக் கொண்டாடும் வகையிலும், தாய்மையின் இன்பத்தையும் முக்கியத்துவத்தையும் போற்றும் வகையிலும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

57. மூத்த குடிமக்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 1,000 நடமாடும் முதியோர் சிகிச்சை மையங்கள் படிப்படியாகத் தொடங்கப்படும். ஒவ்வொரு நடமாடும் சிகிச்சை மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு இயன்முறை மருத்துவர் பணியில் இருப்பர். தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் இவர்கள் நேரில் சென்று இலவச உடல்

பரிசோதனை செய்வர். நாள்பட்ட நோய்களுக்கான மருந்துகளும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

58. மாநிலம் முழுவதும் '**தாய் கேர்**' என்ற பெயரில் கருவுற்ற பெண்களுக்கான சேவை மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்படும். இந்த மையங்களில் கருவுற்ற பெண்கள் அவர்களுடைய மகப்பேறு நாள் நெருங்கும் வேளையில் தங்கியிருந்து பயன் பெறலாம். இந்த மையங்களில், கருவுற்ற பெண்களுக்குக் கட்டணமில்லாமல் உணவு மற்றும் மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

59. தொலைதூர மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குச் சிறப்பு மருத்துவப் பராமரிப்பு கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில், அரசு 'மையம்-கிளை' (Hub and Spoke) மருத்துவமனைகள் வகையிலான **தொலைமருத்துவப் பராமரிப்பு அமைப்பு** உருவாக்கப்படும். நிபுணத்துவ மருத்துவர்களைக் கொண்ட

5 மையங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனை அளவிலான 200 கிளைகள் வலைதளம் மூலம் தொடர்புபடுத்தப்படும். அடுத்த 5 ஆண்டுகளில், இம்மையங்கள் மற்றும் கிளைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, 1,000 மையங்கள் ஏற்படுத்தப்படும். தொலைமருத்துவ வலையமைப்பை உருவாக்குவதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

60. புற்றுநோய் பராமரிப்பு தொடர்பாக இந்த அரசு 'மையம்-கிளை' (Hub and Spoke) மருத்துவமனை வகையிலான அமைப்புகளை உருவாக்கும். புற்றுநோய் பராமரிப்பு மருத்துவமனை, மாநில முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும், உயர் சிகிச்சை மருத்துவமனையாகவும் மாற்றப்படும். நோயாளிகளின் முதல் தொடர்பு மையமாக, ஐந்து மண்டல புற்றுநோய் பராமரிப்பு மருத்துவமனைகள் நிறுவப்படும். இந்நிறுவனங்கள் புற்றுநோய் பராமரிப்பு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளும். இதற்கான விரிவான திட்ட

அறிக்கை தயாரிப்பதற்காக, திருத்த வரவு- செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

61. தொற்றாநோய்கள் மற்றும் புற்றுநோயாளிகளின் தொடர் சிகிச்சைக்கு அத்தியாவசிய மருந்துகள் தடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியமாகும். பரிசோதனைகள் மற்றும் ஆரம்பகால நோய் கண்டறிதல் அதிகரித்துள்ளதால், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் புற்றுநோய்க்கு தொடர் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதிகரித்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் மருந்துத் தேவையை பூர்த்தி செய்ய, தடையற்ற மருந்து விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் உயர்த்துகிறது.

62. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 23,357 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**கூட்டுறவு**

63. "**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்**" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க விவசாயிகளின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாத்திடவும், அவர்களின் மீதான கடன் சுமையினைக் குறைத்திடும் வகையில், விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வாங்கிய கடனை தள்ளுபடி செய்யும் திட்டத்தினை நமது அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 75,000 ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு 100 சதவீதம் முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்தும், பிற விவசாயிகளுக்கு 35,000 ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடி செய்தும், 14.43 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில், 5,932 கோடி ரூபாயிலான விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடியானது, தகுதியுள்ள அனைத்து விவசாயிகளின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. இதுமட்டும் அல்லாமல் எந்நேரமும் விவசாயிகளின் உடன் நிற்கும் அரசாகவே நமது மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையிலான அரசு இருக்கும்.

64. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கூட்டுறவுத் துறைக்கு 8,028 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**வேளாண்மை - உழவர் நலன்**

65. பருவநிலை மாற்றங்களால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இயல்பான அளவிற்குப் பெய்யாததால், மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இல்லாத நிலை ஏற்பட்டது. இதனால், பாசனத்திற்காக வழக்கமாகத் திறக்கப்படும் ஜூன்-12 அன்று மேட்டூர் அணையைத் திறக்க இயலவில்லை. இந்நிலையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கார்/குறுவை/சொர்ணவாரிப் பருவத்தின் நெல் உற்பத்தி குறையாமல் இருப்பதை உறுதி செய்திட, டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல்சாகுபடியினை ஊக்குவிக்க மொத்தம் **134 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறுவை தொகுப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார்.** இதில் நெல் இயந்திர நடவு, நேரடி நெல் விதைப்பு, விதை உற்பத்தி மானியம், நெல் விதை, திரவ உயிர் உரம், நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

66. விவசாயிகளுக்கு வழங்கும் மின் மானியத்திற்கு இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7,432 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வேளாண் மற்றும் உழவர் நலத் துறைக்கு 14,984 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**கால்நடை பராமரிப்பு**

67. கிராமப்புற மேம்பாடு, ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கும் வேளாண் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமாக கால்நடை பராமரிப்புத் துறை விளங்குகிறது. நடப்பு நிதியாண்டில், ஊரகப் பகுதிகளில் வாழும் நலிவடைந்த கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், திருநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு '**வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டத்தின்**' கீழ் 100 சதவீதம் மானியத்தில் ஐந்து வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும். இதன் மூலம், சுமார் 30,000 தகுதி உள்ள நபர்கள் பயனடைவர். இதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 110 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

68. கால்நடை மருத்துவமனைகளுக்குத் தேவையான 41 கட்டடங்கள் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். கால்நடைகளின் மருத்துவ சிகிச்சை தேவைகளை பூர்த்தி செய்ய 25 கால்நடை மருத்துவமனைகள் கால்நடை பல்நோக்கு மருத்துவமனைகளாகவும், 210 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகவும் 40 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தரம் உயர்த்தப்படும். மேலும், 143 புதிய நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

69. எதிர்பாராத இறப்பு, நோய்கள் அல்லது இயற்கை பேரிடர்களால் கால்நடைகளை இழப்பது விவசாயிகளுக்குப் பெரும் நிதிச்சுமையை ஏற்படுத்துகிறது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. விவசாயிகளுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்கும் நோக்கில், இந்த அரசு '**கால்நடைகள் காப்போம்**' என்ற புதிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது. கால்நடைகள் காப்போம் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

70. கால்நடைகளைப் பராமரிப்பதற்கான செலவில், தரமான தீவனத்தின் விலை, மிக முக்கியமான பங்கினை வகிக்கிறது. விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் தரமான தீவனம் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கத்தில், நமது அரசு, தீவன விதை வங்கிகள் மற்றும் கிடங்குகளை 6.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இம்மாநிலத்தில் நிறுவும். மேலும், பசுந்தீவன சாகுபடியினை ஊக்குவிக்கவும், நறுக்கிய தீவன பயன்பாட்டினை மேம்படுத்தவும், சமூகப் பங்களிப்பின் வாயிலாக மேய்ச்சல் நிலங்களை மீட்டெடுப்பதற்கும் 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நடையாய் நடக்கும் வாய் உள்ள மனிதர்களையே மறந்துவிடும் ஆட்சிபோல இல்லாமல், வாயில்லா ஜீவன்களான கால்நடைகள் மீதும் அன்பும் கவனமும் செலுத்தும் அரசுதான் இந்த மனசாட்சி உள்ள மக்களாட்சி அரசு.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலன்**

71. மீனவர்களுக்காக குரல் கொடுப்பதிலும், மீனவர்கள் மீது பாசம் காட்டுவதிலும் புரட்சித் தலைவருக்குப் பிறகு உண்மையான மீனவ நண்பனாக இருக்கும் ஒரே தலைவர், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அந்த உணர்வின் அடிப்படையில்,

மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு சமூகநலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. மீனவர்களுக்காக, மீன்பிடிப்பு குறைவு மற்றும் தடைக்கால நிவாரணம், மானிய விலையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய், மீனவர்களுக்குத் தேவையான நிலையான உட்கட்டமைப்பினை உருவாக்கும் விதமாக மீன்பிடி துறைமுகங்கள், இறங்குதளங்கள், மீன் பண்ணைகள், மீன்பிடி கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு தூண்டில் வளைவுகள், அலை தடுப்புச் சுவர்கள் என அனைத்து வகையிலும் இத்தொழில் மேம்பட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

72. பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு, மாநில அரசு ஒரு குடும்பத்திற்கு 6,000 ரூபாய் என்ற அளவில் பணியில்லாக் காலம் மீன்பிடி உதவித்தொகையாக வழங்கி வருகிறது. இந்த அரசு தற்போது, **பணியில்லாக் கால மீன்பிடி உதவித்தொகையை 6,000 ரூபாயிலிருந்து 7,000 ரூபாயாக உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளது. இதன் மூலம், 1.93 இலட்சம் பாரம்பரிய மீனவர் குடும்பங்கள் பயனடையும்.** இத்திட்டத்தினை

நிறைவேற்றுவதற்காக 135 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

73. நமது பாரம்பரிய மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், நவீன பதப்படுத்தும் வசதிகள் கொண்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை வாங்கும் மீனவர்களுக்கு, வட்டி மானியம் வடிவிலான நிதியுதவி வழங்கப்படும். இதற்கென நடப்பாண்டில் 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பால்வளம்**

74. தமிழ்நாடு பால் உற்பத்தியிலும், பால் கொள்முதல் செய்வதிலும், தேசிய அளவில் முன்னிலையில் உள்ளது. பால் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கவும், ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்திடவும், ஒவ்வொரு ஆண்டும் 10,000 தகுதி வாய்ந்த பெண்களுக்கு கறவை மாடுகள் விலையில்லாமல் வழங்கப்படும். இதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 57 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

75. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு 4,880 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி**

76. 2036-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பினை 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துவதே நமது அரசின் குறிக்கோளாகும். தொழிலகங்கள் அமைய உகந்த சூழலை உருவாக்கி, நம் மாநில இளைஞர்களுக்கு கணிசமான வேலைவாய்ப்புகளை உருவாக்கத்தக்க தொழில் சூழலை ஏற்படுத்துவதன் மூலம் இந்த இலட்சிய இலக்கினை அடைய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நமது அரசு பொறுப்பேற்ற உடன் 14,790 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் 35,062 கோடி ரூபாய் மதிப்பிலான 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்து இடப்பட்டுள்ளன.

77. தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவிலான முதலீடுகளை ஊக்குவித்து, தொழில் வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்தும்

நோக்கில், பல்முனை சரக்கு போக்குவரத்துப் பூங்காக்கள் (Multi Modal Logistics Parks - MMLP), உலர் துறைமுகங்கள் (Dry Ports) மிக முக்கியமான இடங்களிலும், பெட்ரோ இரசாயனத் தொழிற்சாலைகளும், அவற்றுடன் தொடர்புடைய துணைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும். மேலும், தமிழ்நாட்டில் புதிய துறைமுகங்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் இந்த அரசு ஆராயும்.

78. தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, தன் நிலையை மேலும் மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில், ஒரு புதிய **தமிழ்நாடு தொழில் கொள்கை** வெளியிடப்படும். இக்கொள்கை, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, எழுச்சி பெற்று வரும் புதிய தொழில் துறைகளையும் ஆதரித்து, நிலையான வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டை முன்னெடுக்கும் வகையில் வடிவமைக்கப்படும். மேலும், மாநிலத்தின் உற்பத்தி மற்றும் விநியோகத் தகுதிகளைப் பட்டியலிட்டு, முதலீட்டாளர்கள் உள்ளூர் சூழலை ஆழமாகப்

புரிந்துகொள்ள உதவும் ஒரு விரிவான டிஜிட்டல் தளமாக, **தமிழ்நாடு தொழில் திறன் விவரப்பட்டியலை** அரசு உருவாக்கும்.

79. தமிழ்நாட்டின் போட்டித் திறனை மேலும் செம்மைப்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இயங்கும் '**வழிகாட்டி 3.0**' எனும் புதிய முதலீட்டுச் சேவை அமைப்பை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்த உள்ளது. இதன்மூலம், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் நிறுவனங்களுக்குத் தேவையான தகவல்கள், அனுமதிகள், சேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் விரைவாகக் கிடைக்கும். வழிகாட்டி 3.0 அமைப்பின் முக்கிய அங்கமாக, '**தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணையதளம் 3.0**' மேம்படுத்தப்பட்ட வடிவில் செயல்படுத்தப்படும். இதன்மூலம், தொழில் தொடங்குவதற்கும், முதலீட்டுத் திட்டங்களுக்கும் தேவையான அரசு அனுமதிகள், ஒப்புதல்கள், தடையின்மைச் சான்றிதழ்களை ஒருங்கிணைத்து அவற்றை ஒரே இடத்திலேயே பெறலாம். இதன்மூலம், தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதும், முதலீடு செய்வதும் மேலும் எளிதாகி, புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் வழி ஏற்படும்.

80. தமிழ்நாட்டுடன் தங்களது நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்ட உலகளாவிய தமிழ்ச் சமூகம், திறமை, முதலீடு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் அபார வளம் கொண்டுள்ளது. இந்த நல்லுணர்வை பயனுள்ள முதலீடுகளாக மாற்றும் நோக்கில் தொழில் வழிகாட்டி நிறுவனத்தில் '**வெளிநாடு வாழ் தமிழர் முதலீட்டுச் சேவைகள் பிரிவு**' அமைக்கப்படும். இது, உலகளாவிய தமிழ்ச் சமூகம் தமிழ்நாட்டில் முதலீடுகளை எளிதாக்கி, ஊக்குவிக்கும் வகையில் செயல்படும்.

81. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமமான மற்றும் சீரான வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கில், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில், மாவட்ட வாரியான தொழில் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அந்த மாவட்டங்களின் துறைசார்ந்த திறன்களை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (SIPCOT) புதிய தொழிற்பூங்காக்கள் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்புடன் முதலீட்டாளர்களுக்கு ஏற்றவகையில், சுமார் 3,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கப்படும்.

82. தென் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் '**விண்வெளித் தொழில் முதலீட்டு மண்டலமாக**' அறிவிக்கப்படும். இதன் மூலம், தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியில் ஒரு மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்படும். தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைந்துள்ள விண்வெளி ஏவுதளத்தின் அளப்பரிய புவியியல் மற்றும் உத்திசார்ந்த முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த முதலீட்டு மண்டலம் அமையும். இம்மண்டலத்தில் தனியார் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புகள், இணையற்ற உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதற்காக, IN-SPACe-உடன் இணைந்து, மாநில அரசு ஒரு மேம்பட்ட '**விண்கலப் பொதுத் தொழில்நுட்ப வசதியை**' நிறுவி வருகிறது.

83. செயற்கை நுண்ணறிவு மற்றும் டீப் டெக் (Deep Tech) மேம்பாட்டிற்காக இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு மற்றும் புத்தாக்க நகரமாக '**அறிவகம்**' உருவாக்கப்படும். இந்நகரில் செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகம், சர்வதேச திறன் மேம்பாட்டு மையம், குறைகடத்தி வன்பொருள் சோதனை

ஆய்வகம், பல்துறை புத்தாக்க இன்குபேட்டர் (Multi domain innovation incubater) மற்றும் நவீன குடியிருப்பு உட்கட்டமைப்பு வசதிகள் இடம்பெறும். செயற்கை நுண்ணறிவு நிறுவனங்கள், அதிநவீன அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்கள், குவாண்டம் தொழில்நுட்ப நிறுவனங்கள், நிறுவன திறன் மையங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அரசின் செயற்கை நுண்ணறிவு முன்முயற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இயங்குவதற்கான ஒரு தனித்த சூழல் அமைப்பாக இந்த செயற்கை நுண்ணறிவு நகரம் அமையும். இங்கு மேம்பட்ட கணினி தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, சிறப்பு வசதிகள், திறன்மிகு பணியாளர் உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த புத்தாக்கச் சூழல் அமைவிடமாக இருக்கும். இதற்கான சாத்தியக்கூறு ஆய்வு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

84. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்கு 4,414 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்**

85. பதிவு செய்யப்பட்ட 43.47 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன், தேசிய அளவில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. புதிதாகத் தொழில் தொடங்குவோருக்கு மூலதன மானியம் மற்றும் வட்டி மானியம், பல திட்டங்களின் கீழ் வழங்கப்படுகிறது. இந்த நிதியாண்டில், தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 225 கோடி ரூபாயும், மூலதன மானியங்கள் திட்டத்தின் கீழ் 352 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

86. சுற்றுச்சூழலுக்கு உகந்த எஃகு உற்பத்தியை ஊக்குவிக்கவும், எஃகு உருளை ஆலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தைத் தணிக்கவும், '**பசுமை எஃகு உற்பத்தி முன்முயற்சிக்கு**' அடுத்த 5 ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

87. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 2,142 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்**

88. இந்தியாவின் முன்னணி ஜவுளி, ஆடை, கைத்தறி, கைவினை மற்றும் உற்பத்தித் தலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில், ஜவுளி, ஆடை மற்றும் கைவினைத் துறைகளுக்கான வடிவமைப்புக் கல்வி, புத்தாக்கம், ஆராய்ச்சி, தயாரிப்பு மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு தனி நிறுவனம் இதுவரை இல்லை. மேலும், தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள கைவினைஞர் சமூகங்கள் மற்றும் திறமைவாய்ந்த மாணவர்களுக்கு, நிதிச் சிக்கல்கள் மற்றும் சிறப்புக் கல்வி வாய்ப்புகளை அணுகிப் பெறுவதில் உள்ள சிரமங்கள் ஆகியவற்றால் போதிய வாய்ப்பு கிடைக்காமலும், தேசிய அளவிலான முதன்மை வடிவமைப்பு நிறுவனங்களை அணுகுவதில் பல இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர். இந்த இடைவெளிகளை சரிசெய்யும் நோக்கில், தொழில் மற்றும் கல்வித்துறையினரின் தீவிர

பங்களிப்புடன், மாநில முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக '**தமிழ்நாடு வடிவமைப்பு நிறுவனம்**' அமைக்கப்படும். 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள இந்நிறுவனத்தை நிறுவுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்.

89. தொழில்நுட்ப ஜவுளித்துறையானது தற்போது வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாகும். சுகாதாரம், வாகனத் தொழில், கட்டுமானம், வேளாண்மை மற்றும் பாதுகாப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புத்தாக்கம், மதிப்புக் கூட்டல், ஏற்றுமதி மற்றும் உயர்திறன் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் இத்துறையில் நிறைந்துள்ளன. இந்தியாவின் முன்னணி ஜவுளி உற்பத்தி மாநிலமாக தமிழ்நாடு விளங்கினாலும், தொழில்நுட்ப ஜவுளித் துறையில் குறைந்த அளவிலான விழிப்புணர்வு மற்றும் இது குறித்த சர்வதேச அனுபவம், மேம்பட்ட தொழில்நுட்பங்களை அணுகுவதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றின் காரணமாக ஜவுளி உற்பத்தியில் இத்துறையின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. இந்த இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில், சர்வதேச கல்வி மற்றும் ஆராய்ச்சி

நிறுவனங்களுடன் இணைந்து **தொழில்முனைவோர்களுக்கான தொழில்நுட்ப ஜவுளி மாற்றத்திற்கான திட்டம்** தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் தொழில்முனைவோர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs), மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள் தொழில்நுட்ப ஜவுளித் துறைக்கு மாறுவதற்குத் தேவையான பன்னாட்டு வாய்ப்புகள், தொழில்நுட்பப் பயிற்சி, தொழில்நுட்பப் பரிமாற்றம், சந்தை நுண்ணறிவு, புத்தாக்க ஆதரவு மற்றும் தொழில் வழிகாட்டுதல் ஆகியவை வழங்கப்படும்.

90. பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக, 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் '**தமிழ்நாடு பனை மேம்பாட்டுக் கழகம்**' நிறுவப்படும். பதநீர் பதப்படுத்துதல், பனங்கருப்பட்டி உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பனைப் பொருட்களின் ஏற்றுமதி போன்ற ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். மாநில மரமான பனை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதை இம்முன்முயற்சி உறுதிசெய்யும்.

91. திருப்பூரில் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பசுமைவழி ஆடை உற்பத்தியை ஊக்குவிக்க பல கட்டங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இதற்கென, 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் '**திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் டெக்னாலஜி சென்டர்**' அமைக்கப்படும்.

92. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு 1,678 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள்**

93. தூயசக்தியாக இருப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல தொழில்நுட்ப சக்தியாகவும் மாற வேண்டியது காலத்தின் கட்டாயம். தொழில்நுட்பத்தையும், அறிவியலையும் வளர்த்தால்தான் வெற்றி உறுதியாகும். அதைப் பின்பற்றித்தான் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்ந்து வலுவான மற்றும் நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்து வருகின்றன. ஆண்டுதோறும் 2.5 இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியை உருவாக்கியுள்ள

இந்நிறுவனங்களானது, 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினையும் வழங்குகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சியினை மேலும் ஊக்குவிக்க இவ்வரசு பல முன்முயற்சிகளை மேற்கொள்ளும்.

94. செயற்கை நுண்ணறிவு என்பது இனி ஒரு எதிர்கால தொழில்நுட்பமாக அல்லாமல் நமது குடிமக்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகவும் மாற்றமடைந்துள்ளது. நிர்வாகத்தை விரைவானதாகவும், வெளிப்படையானதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், எளிதில் அணுகக் கூடியதாகவும் மாற்றுவதற்கு, செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்த இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம், இயங்குபடம், காட்சி விளைவுகள், சித்திரக்கதை, விளையாட்டு மற்றும் மெய்நிகர் உண்மை (AVGC-XR) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை '**தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு**' (TN AI Mission) வலுப்படுத்தப்படும். இந்நிறுவனம் சுகாதாரம், விவசாயம், கல்வி,

குடிமக்கள் சேவைகள், நகர்ப்புர நிருவாகம் மற்றும் சமூகநல நிருவாகம் போன்ற துறைகளிலும், தேவையான இதர துறைகளிலும், செயற்கை நுண்ணறிவு சார்ந்த முன்முயற்சிகளில் தனித்த கவனம் செலுத்தும்.

95. செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிசெய்யவும், பல்வேறு அரசுத் துறைகளின் சேவைகளை இணையவழியில் மக்களுக்கு வழங்கும் வகையில் அனைத்து இ-சேவை மையங்களும் அதிவேக இணைய இணைப்பு மற்றும் கூடுதல் மக்கள்நல சேவைகளுடன், '**இ-சேவை 2.0 மையங்களாக**' அரசு மேம்படுத்தும். தற்போது, 20 துறைகளைச் சார்ந்த 76 சேவைகளை வழங்கும் '**நம்ம அரசு**' வாட்ஸ்அப் சாட்பாட் வசதியானது, **275 மக்கள்நல சேவைகளை வழங்கும் வகையில் மேம்படுத்தப்படும்**.

96. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு 398 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**எரிசக்தி**

97. 2036 ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் அரசின் தொலைநோக்குப் பார்வையின் இலக்கை அடைவதில் எரிசக்தித் துறையின் பங்களிப்பு இன்றியமையாததாகும். தமிழ்நாட்டிற்கு 2,640 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறனை வழங்கக்கூடிய உடன்குடி நிலை-1மற்றும் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல (SEZ) அனல்மின் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. சுமார் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஈ.டி.பி.எஸ் (ETPS) விரிவாக்கத் திட்டம், அரசு தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5,050 கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டத்தின் செயல்பாடு விரைவுபடுத்தப்படும். அதிகபட்ச மின் தேவையை நிர்வகிப்பதில் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளின் (BESS) முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள இவ்வரசு, இத்துறையில் தனியார் முதலீடுகளை எளிதாக்கி தமிழ்நாட்டை இந்தியாவின் ‘BESS மையமாக’ மாற்றும் வகையில் **புதிய BESS ஊக்குவிப்புக் கொள்கையை வெளியிடும்**.

98. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மையப்படுத்தி தனது எரிசக்தி உத்தியை செயல்படுத்துவதில் அரசு முனைப்பாக உள்ளது. 'பிரதம மந்திரி சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டத்துடன் இணைந்து புதிய '**வீட்டுக் கூரை சூரிய மின் மானியத் திட்டம்**' அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் சூரிய மின்பலகைகள் பொருத்தும் வீட்டு நுகர்வோருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இது அவர்களின் மின்சாரக் கட்டணங்களைப் பெருமளவு குறைப்பதுடன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டின் மூலம் பசுமை மாற்றம் நிகழ்வதை சாத்தியப்படுத்தும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சென்னை மாநகரில் உள்ள அனைத்து நுகர்வோர்களுக்கும் மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள 50 இலட்சம் தொழில் மற்றும் வணிக நுகர்வோர்களுக்கும் **ஸ்மார்ட் மீட்டர்கள்** அமைக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்.

99. 2035-36 ஆம் ஆண்டிற்குள் அதிகபட்ச மின் தேவையின் அளவு 37,000 மெகாவாட்டைக் கடக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மின் உற்பத்தி, விநியோகம் மற்றும் பகிர்மானத்தில் முதலீடுகளை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மாநிலத்தில் பகிர்மானக் கட்டமைப்பை வலுப்படுத்தக் கூடிய மிக முக்கிய திட்டமாக **கோயம்புத்தூர் - அரியலூர் 765 கே.வி. மின் பகிர்மானப் பாதைத் திட்டம்** 4,000 கோடி ரூபாய் செலவில் அரசு தனியார் கூட்டாண்மை (PPP) முறையில் செயல்படுத்தப்படும். மேலும், சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மிக உயர் அழுத்த மின் பகிர்மானத் திறன் 1,390 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும். தமிழ்நாட்டின் தென் மண்டலத்திலிருந்து பசுமை எரிசக்தியைக் கொண்டு செல்வதற்கு மிக முக்கியமாக விளங்கும் 1,187 கோடி ரூபாய் மதிப்பிலான **பசுமை எரிசக்தி வழித்தடத்தின் இரண்டாம் கட்டம்** மற்றும் 1,640 கோடி ரூபாய் மதிப்பிலான **விருதுநகர்-கோயம்புத்தூர் 765 கே.வி. மின் பகிர்மானத் திட்டங்களின்** செயல்பாட்டை அரசு விரைவுபடுத்தும். 11,760 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைக் கையாளக்கூடிய 6,884 கோடி ரூபாய் மதிப்பிலான பசுமை எரிசக்தி வழித்தடத்தின் மூன்றாம் கட்டத் திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியுதவியைப் பெறவும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

100. மின் விநியோகத்தை மேம்படுத்தும் வகையில் 1,543 கோடி ரூபாய் முதலீட்டில் 178 புதிய துணை மின்நிலையங்களை அமைக்கும் பணியை அரசு மேற்கொள்ளும். மேலும், 2,000 கோடி ரூபாய் செலவில் 40,000 பழைய விநியோக மின்மாற்றிகள் படிப்படியாக மாற்றப்படும். மின்சார வாகனங்களின் பயன்பாட்டினை ஊக்கப்படுத்தும் வகையில், அரசு தனியார் கூட்டாண்மை முறையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் மின்சார வாகனங்களுக்கான 20,000 பொது சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அடுக்குமாடிக் குடியிருப்போர் நலச் சங்கங்களின் (RWAs) மூலம் குடியிருப்புகளில் அமைக்கப்படும் மின் வாகன சார்ஜிங் நிலையங்களுக்கு அரசு மானியம் வழங்கும். இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

101. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க, இரு மாதங்களில் 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் நுகர்வோருக்கு வழங்கப்படும் விலையில்லா மின்சாரத்தை 100 யூனிட்டிலிருந்து 200 யூனிட்டாக உயர்த்தி

வழங்குவதற்காக, இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,545 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வீட்டு உபயோக நுகர்வோர், வேளாண் விவசாயிகள் என மின் நுகர்வோரின் பயன்பாட்டிற்கு வழங்கும் மானியத்தின் கீழ், இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,860 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 15,828 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி**

102. சென்னைப் பெருநகரப் பகுதியின் எதிர்கால வளர்ச்சியை வழிநடத்தும் விதமாக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1,189 சதுர கி.மீ. பரப்பினை உள்ளடக்கிய மூன்றாம் முழுமைத் திட்டத்தை (Third Master Plan) (2027-2046) தயாரித்து வருகிறது. சென்னை பெருநகரப் பகுதியின் விரைவான விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டும், ஒருங்கிணைந்த திட்டமிடலின் தேவையை உணர்ந்தும் **5,904 சதுர கி.மீ. பரப்பளவில், விரிவுபடுத்தப்பட்ட**

**சென்னை பெருநகரப் பகுதிக்கான ஓர் விரிவான முழுமைத் திட்டத்தை (Comprehensive Master Plan) அரசு தயாரிக்கும்.** இத்திட்டமானது, நீண்டகால வளர்ச்சி மற்றும் மாற்றத்திற்கான ஒரு வரைபடமாகச் செயல்படும். மேலும், இந்த முழுமைத் திட்டம் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட பெருநகரத் திட்டமிடல் கட்டமைப்புகளுடன் ஒப்பிடப்பட்டு தரம் மதிப்பிடப்படும். இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

103. மனைகள் மற்றும் கட்டடங்களுக்கான திட்ட அனுமதி தமிழ்நாட்டில் பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புர ஊரமைப்பு இயக்குநரகம், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் என பல நிலைகளில் வழங்கப்படுகின்றன. எனவே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகர்ப்புர ஊரமைப்பு இயக்குநரகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து **செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்துடன் கூடிய இணையவழி திட்ட அனுமதி தளம் (Single Platform for Efficient Expedited Development - SPEED)**

**அறிமுகப்படுத்தப்படும்**. இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் திட்ட அனுமதியானது குறித்த நேரத்தில், வெளிப்படைத் தன்மையுடன் மக்களுக்குக் கிடைக்கும். இதனைச் செயல்படுத்துவதற்காக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

104. துரித நகர்மயமாக்கல் காரணமாக மிகவும் பாதிக்கப்படும் நகர்ப்புர ஏழை மக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு அரசு, அடிப்படை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல், பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் முறையின்கீழ் தனி வீடுகள் கட்டுதல், வாழ்வாதார மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறுத் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப் பணிகளின் கீழ், பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ள 24,131 அடுக்குமாடிக் குடியிருப்புகளை கட்டும் பணிகள் இவ்வாண்டில் முடிவடைவதுடன், 14,194 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் இவ்வாண்டில் தொடங்கப்படும். **இத்திட்டத்திற்காக 1,253 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது**.

105. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களும், ஆற்றல்மிக்க இளைஞர்களும் கண்ணியமான, பாதுகாப்பான மற்றும் தரமான குடியிருப்பு வசதியைப் பெறுவது இந்த அரசின் உயரிய இலக்குகளில் ஒன்றாகும். இதனை முன்னெடுத்துச் செல்லும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால், முதற்கட்டமாக சென்னைப் பெருநகரப் பகுதியில் '**மாநகர இளைஞர் மற்றும் குடும்ப வீட்டு வசதித் திட்டம் (MY-HOME)**' என்ற முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ், அடுத்த ஏழு ஆண்டுகளில் 1 இலட்சம் வீடுகள் கட்டப்படும். இந்த இலட்சியத் திட்டத்தின் மூலம், அரசு-தனியார் கூட்டாண்மை (PPP) வாயிலாக சுமார் 15,000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படும். இதற்கு ஊக்கமளிக்கும் வகையில், தமிழ்நாடு உறைவிட நிதியத்தின் (Tamil Nadu Shelter Fund) மூலம் 3,500 கோடி ரூபாய் செயல்திறன் இடைவெளி நிதி (Viability Gap Funding) வழங்கப்படும். இந்தக் கூட்டாண்மை அடிப்படையிலான அணுகுமுறையுடன், மின்னணு வாடகை பற்றுச்சீட்டு (Digital Rental Voucher) முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், குறைந்த வருமானம் கொண்ட

குடும்பங்களும், இளைஞர்களும் தங்களது வருமானத்திற்கு ஏற்ற, பாதுகாப்பான மற்றும் கண்ணியமான குடியிருப்புகளை எளிதில் பெறும் சூழல் உருவாக்கப்படும். இந்த முன்னோடி முயற்சி, சென்னைப் பெருநகரத்தை அனைவருக்கும் சமமான வாய்ப்புகளையும், தரமான வாழ்க்கைத் தரத்தையும், பாதுகாப்பான குடியிருப்பு வசதியையும் வழங்கும் பெருநகரமாக மாற்றுவதில் முக்கியப் பங்காற்றும்.

106. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு 8,852 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்**

107. மாநிலத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிப் பயணத்தின் அத்தியாயம் தமிழ்நாட்டின் நகர்ப்புரப் பகுதிகளில் இருந்தே தொடங்கும். நகர்ப்புர உட்கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்து, நமது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு குடிமக்களும் பயன்பெறும் வகையில் சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்கும் நோக்கில், நகர்ப்புர உட்கட்டமைப்பு,

குடிநீர் வழங்கல், நிலத்தடிக் கழிவுநீர் வடிகால் அமைப்பு, ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை, நகரச் சாலைகள், நகர்ப்புரப் போக்குவரத்து, பசுமைப் பரப்பு விரிவாக்கம், நகர்ப்புர நீர்நிலைகளின் பாதுகாப்பு, சமூக உட்கட்டமைப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவைச் சார்ந்த மின் ஆளுமை மற்றும் பிரத்தியேக நகர்ப்புரப் பொது சுகாதார மேம்பாட்டு இயக்கம் ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ் இணைக்கும் ஒருங்கிணைந்த இயக்கமான '**முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தினை**' அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். 2031 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள நகரங்கள் எவ்வாறு காட்சியளிக்க வேண்டும், எவ்வாறு உணரப்பட வேண்டும், எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை இத்திட்டம் புதிதாக வடிவமைக்கிறது. இதன் மூலம் நகர்ப்புர ஆளுமையில், இந்தியாவின் முன்னணி முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு நிலைநிறுத்தப்படும். இந்த இயக்கத்தின் கீழ், நடப்பு நிதியாண்டிற்கு 2,117 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

108. பெருநகர சென்னை மாநகராட்சி, 91 இலட்சம் மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதையும், நகரின் வாழ்வாதாரத் தரத்தை மேம்படுத்தும் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதையும் உறுதிசெய்து, சேவையாற்றி வருகிறது. நகர்ப்புரப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில், சென்னை காவல்துறை மற்றும் பெருநகரப் போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் நுண்ணறிவுப் போக்குவரத்து மேலாண்மை அமைப்பு இறுதிக்கட்ட செயலாக்கத்தில் உள்ளது. மேலும், பாதசாரிகளுக்கான கட்டமைப்பு வசதி, அனைவரும் சமமாக அணுகக்கூடிய வசதி மற்றும் நகர்ப்புர வடிவமைப்பு மேம்பாடு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து, **விரிவான நகர்ப்புரப் போக்குவரத்து வசதிகள் மற்றும் தெருக்கள் மறுசீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்**. இதன் ஒரு பகுதியாக, 20 இடங்களில் திறன்மிகு வாகன நிறுத்துமிட மேலாண்மை (smart parking management) அமைக்கப்படுவதுடன், அம்பத்தூர் மற்றும் கிண்டி தொழிற்பேட்டைகளின் சாலைகள் மறுவடிவமைக்கப்படும். சென்னையின் பசுமைப் பரப்பை மேம்படுத்தி, மக்களை மையமாகக் கொண்ட பொது இடங்களை உருவாக்கும் வகையில், குடியிருப்புப்

பகுதிகள் மற்றும் முக்கிய வழித்தடங்களின் நடைபாதைகள் அழகுபடுத்தப்பட்டு பசுமையாக்கப்படும்.

109. சென்னையை ஒரு நிலையான மற்றும் பேரிடர் காலங்களில் விரைந்து மீளும் தன்மையுள்ள நகரமாக மாற்றுவதற்கான தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாக, பல்வேறு இடங்களில் நீர் நிலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், பசுமை உட்கட்டமைப்பிற்கான மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். நகர்ப்புர வெள்ளப் பாதிப்புகளைத் தடுப்பதற்கு முக்கிய நீர்வழித் தடங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு வெள்ளத்தடுப்புச் சுவர்களின் உயரம் உயர்த்தப்பட்டு, சங்கிலி இணைப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுற்றுச்சூழல் வளங்கள் பாதுகாக்கப்படுவதுடன், நிலையான சமூகப் பயன்பாட்டு இடங்கள் உருவாக்கப்படும்.

110. சென்னையில் உள்ள அனைத்து முக்கியக் குடிநீர் ஆதாரங்களையும் குடிநீர் விநியோக நிலையங்களுடன் இணைக்கும் **முதன்மை சுற்றுக்குழாய் திட்டம்** 3,108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. 2030-31 ஆம் ஆண்டிற்குள்

நிறைவடையும் வகையில் நடைபெற்று வரும் இத்திட்டப் பணிகள் முடிவடைந்த பின்னர், சென்னை மாநகரம் முழுவதும் சமமான மற்றும் தடையற்ற குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும். ஒவ்வொரு சிறந்த நகரமும் தன் மக்களுக்கு அளிக்கும் மிக அடிப்படையான உறுதிமொழி இதுவே: '**தூய்மையான குடிநீர், விதிவிலக்கின்றி, ஒவ்வொரு நாளும்**'.

111. மக்கள் பயன்பாட்டிற்கு உகந்த வகையில், அனைத்து மாநகராட்சிகளிலும் வீதிகள் மேம்படுத்தப்படும். சரியான சாலை இணைப்பு, நடைபாதைகள், மிதிவண்டிகளுக்கென தனிப் பாதைகள், சீரான குறுக்கு வீதி இணைப்புகள், மேம்பட்ட சாலைச் சந்திப்புகள், பள்ளிகளுக்குப் பாதுகாப்பாகச் செல்வதற்கான பாதைகள் மற்றும் நவீன எல்.ஈ.டி. தெரு விளக்குகள் ஆகியவை அமைக்கப்பட்டு இவ்வீதிகள் நவீன நகர்ப்புர வீதிகளாக உருவெடுக்கும்.

112. நம்மில் பலர் பிறந்து வளர்ந்து, நம்மை அரவணைத்து, நம்முடன் ஒரு பகுதியாகவே இருப்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க நமது சென்னை மாநகரம். ஒரு காலத்தில் சென்னை மாநகரத்தின்

குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்த நதிகளான அடையாறு மற்றும் கூவம் இன்று ஒரு கழிவுநீர் நதியாக மாறியிருப்பது நம்மில் பலருக்கு வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாகும். தமிழ்நாட்டினை இதற்கு முன், மாறி மாறி ஆண்ட அரசுகள் அடையாறு மற்றும் கூவம் ஆறுகளை சுத்தப்படுத்தவும், அழகுபடுத்தவும் பல நூறு கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தை வாரியிறைத்தும் ஆறுகளின் தன்மையில் பெரிய மாற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான நாகரிகங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ, இன்கா, மெசபடோமியா ஆகியவை பெருநதிகளின் அருகிலேயே தழைத்தன. கூவம் மற்றும் அடையாறு ஆறுகளை அதன் இயல்பு நிலைக்குக் கொண்டு வர நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு கடுமையாக பாடுபடும். சியோல் நகரத்தின் சியோங் - கியே - சியோன் (Cheonggyecheon) நதி, சிங்கப்பூர் நகரத்தின் கல்லாங் (Kallang) நதி போன்றவை நதிகள் மறுசீரமைப்பின் மூலம், அந்நகரங்களின் உலகளவில் பேசப்படும் அடையாளங்களாக மாறிவிட்டன. கூவம் மற்றும் அடையாற்றினை சென்னையின் அடையாளமாக மாற்றுவதற்கு உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள்

கோரப்பட்டு, விரிவான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும். கூவம் மற்றும் அடையாறு ஆறுகளில் பொதுமக்கள் படகு சவாரி செய்வதும், குழந்தைகள் ஆனந்தக் குளியலில் ஈடுபடுவதையும், அனைத்து வயதினரும் நதிக்கரையில் உடற்பயிற்சி செய்து தூய்மையான காற்றை சுவாசிப்பதையும் நமது அரசு உறுதிசெய்யும்.

113. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 29,863 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**நெடுஞ்சாலைகள்**

114. சாலை உட்கட்டமைப்பு, மாநிலத்தின் போக்குவரத்து அமைப்பின் முக்கிய அங்கமாக விளங்குகிறது. உலகத்தரம் வாய்ந்த, நீடித்த, பாதுகாப்பான மற்றும் நிலைத்தன்மை கொண்ட சாலை உட்கட்டமைப்பை வழங்குவது அரசின் முன்னுரிமையாகும். **ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் 9,300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மாநில நெடுஞ்சாலைகளை

நான்குவழிச் சாலைகளாக அகலப்படுத்துதல், புறவழிச் சாலைகள் அமைத்தல், சாலைப் பாதுகாப்பு, நடைமேம்பாலம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை இதர மாவட்டச் சாலைகளாகத் தரம் உயர்த்தல், பாலங்கள், ஓடுதள மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை அடங்கும்.

115. சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டு, '**பாதுகாப்பான சாலைகள் இயக்கம்**' அறிமுகப்படுத்தப்படும். சாலைகள் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்தக்கூடிய இந்த இயக்கத்தில், செயற்கை நுண்ணறிவின் மூலம் வேகக் கட்டுப்பாடு, போக்குவரத்து விதிமீறல்களைக் கண்காணித்தல், சாலை ரோந்துப் பிரிவு மற்றும் தீவிர காயங்களுக்கான சிகிச்சை மையங்கள் அமைத்தல் ஆகியவை அடங்கியிருக்கும்.

116. தமிழ்நாட்டில் உள்ள பல சாலைகள் போதிய பராமரிப்பின்றி குண்டும் குழியுமாக இருப்பதால் அந்தச் சாலைகளில் பயணிப்பது ஒரு சவாலாகவே உள்ளது. இச்சாலைகளை சரி செய்யத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

செய்யப்படுகிறது. இதன் மூலம், உரிய பராமரிப்பின்றி இருக்கும் சாலைகள் '**செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்**' என்ற அடிப்படையில் பராமரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப்படும். சாலைகளில் குறைபாடுகள் இருக்கும்பட்சத்தில் பொதுமக்கள் '**நம்ம சாலை**' செயலியின் மூலம் உடனுக்குடன் புகைப்படம் எடுத்து தகவல் தெரிவிக்கலாம். இக்குறைபாடுகள் துரிதமாக சீர்செய்யப்படும்.

117. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 21,524 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**போக்குவரத்து**

118. தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழகங்களின் வாகனத் தொகுப்பை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இந்த நோக்கில், மொத்தச் செலவு ஒப்பந்த முறையின் (Gross Cost Contract) கீழ், மின்சாரப் பேருந்துகளை இந்த அரசு இயக்கவுள்ளது. நடப்பு நிதியாண்டில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு குளிர்சாதன

வசதிகளைக் கொண்ட 1,000 புதிய மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும். பேருந்துப் பணிமனைகளில் மின்சாரப் பேருந்துகளுக்கான மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சார்ந்த வசதிகளை ஏற்படுத்துவதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

119. போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக 7,675 கோடி ரூபாயும், செயல்திறன் இடைவெளி நிதியுதவியாக 2,650 கோடி ரூபாயும், பங்கு மூலதன உதவியாக 1,005 கோடி ரூபாயும் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்கு 13,561 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மெட்ரோ இரயில் திட்டங்கள்**

120. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 118.9 கி.மீ. நீளத்திலான மூன்று வழித்தடங்களைக் கொண்ட கட்டம்-II ன் பணிகள் 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. பூந்தமல்லி புறவழிச்சாலை முதல் போரூர் சந்திப்பு

வரையிலான தடத்தை, ஏற்கெனவே உள்ள வடபழனி மெட்ரோ நிலையத்துடன் இணைக்கப்படும் வகையில் 14.64 கி.மீ. நீளத்திலான, 11 மெட்ரோ இரயில் நிலையங்களைக் கொண்ட கட்டம்-II-ன் முதல் பகுதி, விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

121. மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட பின்வரும் மெட்ரோ இரயில் திட்டங்கள் இந்திய அரசின் தீவிர பரிசீலனையின் கீழ் உள்ளன.

(i). சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரை.

(ii). ஆவடி வழியாக கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரை.

(iii). திருப்பெரும்புதூர் வழியாக பூந்தமல்லி முதல் சுங்குவார்சத்திரம் வரை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் மெட்ரோ இரயில் வழித்தடத் திட்டங்களுக்கு இந்திய அரசு விரைவான ஒப்புதல் வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரிலிருந்து கர்நாடகா மாநிலம் பொம்மசந்திரா

வரையிலான மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒன்றிய அரசு மற்றும் கர்நாடக அரசு ஆகிய இரண்டு அரசுகளுடனும் இணைந்து தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வருகிறது.

**நீர் வளம்**

122. மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டிற்கு உரிய நியாயமான பங்கினையும், நலனையும் மற்றும் உரிமைகளையும் நமது அரசு தொடர்ந்து பாதுகாக்கும். ஏற்கெனவே உள்ள ஒப்பந்தங்கள், தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின்படி காவிரி நீர் உரிய நேரத்தில் திறந்துவிடப்படுவதையும் தமிழ்நாடு அரசு உறுதி செய்யும். மேகதாது திட்டம் போன்ற மாநிலத்தின் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய திட்டங்களை எதிர்ப்பது உட்பட, சட்டரீதியான, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ரீதியான தொடர் முயற்சிகள் மூலம் தமிழ்நாட்டின் நீர் உரிமைகளை அரசு பாதுகாக்கும். மேலும், நீண்டகால நீர் பாதுகாப்பை வலுப்படுத்தவும், விவசாயிகளின் நலனை மேம்படுத்தவும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துதல், ஆனைமலையாறு மற்றும் நல்லாறு

அணைத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் கோதாவரி-காவிரி நதிநீர் இணைப்புத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வலியுறுத்துதல் ஆகிய நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

123. முந்தைய அரசுகளால் அறிவிக்கப்பட்ட பல்வேறு நதி இணைப்புத் திட்டங்கள் தாமதமாகவே செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. வேளாண்மைக்கு நீர் ஆதாரமே உயிர்நாடியாகத் திகழ்கின்ற போதிலும், இத்திட்டங்கள் உரிய காலத்திற்குள் செயல்படுத்தப்படாதபோது, அது வேளாண் உற்பத்தித் திறனைப் பாதிக்கிறது. எனவே, இத்திட்டங்களின் தாமதமான செயல்பாட்டை உணர்ந்துள்ள இந்த அரசு, அத்தகைய நதி இணைப்புத் திட்டங்களின் செயல்பாட்டை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும். காவிரி-வைகை-குண்டாறு நதி இணைப்புத் திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்தும். இத்திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், பெண்ணையாறு-செய்யாறு, பெண்ணையாறு-பாலாறு மற்றும் தாமிரபரணி-வைப்பாறு நதி இணைப்பிற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்ய

50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு உட்பட நதி இணைப்புத் திட்டங்களுக்காக மொத்தம் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

124. தமிழ்நாட்டின் உயிர்நாடிகளாகத் திகழும் காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி போன்ற பெருநதிகளில், சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் வீட்டுக் கழிவுநீர் நேரடியாக கலப்பதாலும், நதிக் கரைகளில் திடக்கழிவுகள் கொட்டப்படுவதாலும், அவை தொடர்ந்து மாசடைந்து வருகின்றன. குறிப்பாக, இந்நதிகள் தொழில்மயமான மற்றும் நகரமயமான பகுதிகள் வழியாகச் செல்லும்போது, இந்நதிகளின் சில பகுதிகள் கடுமையான மாசுபாட்டிற்கு உள்ளாகின்றன. நமது நதிகளின் தூய்மையை மீட்டெடுப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொண்டு, விரிவான திட்ட அறிக்கையை இந்த அரசு தயாரிக்கும். இத்திட்டத்தில், திரவக் கழிவுகளைக் கையாள்வதற்காக, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கசடு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் ஆகியவை உள்ளடங்கியிருக்கும். மேலும், இந்நதிகளின் கரைகளை ஒட்டியுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் முழுமையான

திடக்கழிவு மேலாண்மையையும், நகர்ப்புரங்களில் நதிக்கரை மேம்பாட்டையும், நதி மேற்பரப்புச் சுத்தம் செய்தலையும், இத்திட்டம் உறுதிசெய்வதாக அமையும். இத்திட்டத்திற்கான ஆரம்பகட்ட ஆய்வு மற்றும் சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்வதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

125. நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தவும், பாசனத் தேவைகளுக்கான நன்னீர் கிடைப்பதை உறுதிசெய்யவும், பருவமழைக் கால மழைநீரை சேமித்து வைக்கவும், **காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது** தொடர்பாக இந்த அரசு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளும். இந்த ஆய்வின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், **காவிரி டெல்டா பகுதியின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பிற்கான** சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

126. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீர்வளத் துறைக்கு 9,264 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம்**

127. கடற்கரை அரிப்பு, புயல்கள், கடல்மட்டம் உயர்வு மற்றும் பிற கடலோர இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதில் கடற்கரையோரங்களில் காணப்படும் அலையாத்திக் காடுகள் (மாங்குரோவ் காடுகள்) முக்கியப் பங்கு வகிக்கின்றன. மேலும், அவை பல்லுயிர்ப் பெருக்கம், மீன்வளம், கார்பன் சேமிப்பை அதிகரித்தல் மற்றும் கடலோர மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துகிறது. கடலோரச் சூழலமைப்பை வலுப்படுத்தவும், பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகளைத் தணிக்கவும், பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் மூலம் '**தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தின்**' (TN-SHORE) கீழ் கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,500 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்திக் காடுகள் புதிதாக உருவாக்கப்படுவதுடன், சேதமடைந்த அலையாத்திக் காடுகள் மீட்டெடுக்கப்படும்.

தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தினைச் செயல்படுத்துவதற்கு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 322 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

128. மனித - வனவிலங்கு மோதல்களைத் தணிக்கும் வகையில், அறிவியல் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய விரிவான திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், சூரிய மின்வேலி மற்றும் எஃகு கம்பி வேலி அமைத்தல், சமூகப் பங்களிப்புடன் கூடிய வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், வனப் பாதுகாப்புப் பணியாளர்களை நியமித்தல், மனித-வனவிலங்கு மோதல் மேலாண்மை, இரவு நேரச் சுற்றுக்காவல், பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளுக்காக புவியிடங்காட்டி (GPS) வசதியுடன் கூடிய வாகனங்களை பயன்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம், கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நீலகிரி, சேலம், தேனி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மனித-வனவிலங்கு மோதல்கள் அதிகமாக ஏற்படும்

100 கிராமங்களில் செயல்படுத்தப்படும். இதற்காக, நடப்பு நிதியாண்டில் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

129. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறைக்கு 1,762 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி**

130. டிஜிட்டல் வசதியுடைய சுயசார்பு மீள்திறன் கொண்ட உள்ளாட்சி அமைப்புகளானது தன்னிறைவு மற்றும் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் திறன் கொண்ட சமூகங்களை உருவாக்கும். அந்த வகையில், வலுவான அடிப்படைக் கட்டமைப்பும், நிலையான வளர்ச்சியும் இணைந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, கிராமப்புற வறுமையை முற்றிலும் ஒழித்து, அனைவருக்கும் கண்ணியமான வாழ்வாதாரத்தை உறுதி செய்யக்கூடிய கிராமப்புறச் சூழலை உருவாக்குவதே அரசின் தொலைநோக்குப் பார்வையாகும்.

131. இந்த அரசு எதிர்கொண்டுள்ள இடர்பாடுகளில் முதன்மையானது மற்றும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது,

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு நிலையான வீட்டு வசதியை உறுதி செய்வதாகும். கடந்த முப்பது ஆண்டுகளாக மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்தியிருந்தாலும், தமிழ்நாடு இன்னும் குடிசைகள் அற்ற மாநிலமாக மாறவில்லை. போதுமான நிதி இல்லாமை, பயனாளிகளைத் தேர்வு செய்வதில் ஏற்படும் சேர்த்தல் மற்றும் நீக்கல் பிழைகள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள நிலப் பற்றாக்குறை ஆகியவை இதில் நிலவும் முக்கிய இடர்பாடுகளாக உள்ளன. எனவே, இப்பிரச்சினைக்கு படிப்படியாகத் தீர்வு காணும் விதமாக புதிய மாநில வீட்டுவசதித் திட்டமான '**வெற்றி வீடு திட்டம்**' அரசால் அறிமுகப்படுத்தப்படுகிறது.

132. வீட்டிற்கான அலகுத் தொகை குறைவாக நிர்ணயிக்கப்படுவதால், உண்மையில் மிகவும் தகுதிவாய்ந்த ஏழைக் குடும்பங்கள் வீடு வழங்கும் திட்டங்களிலிருந்து விலக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் செலவை ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்ட குடும்பங்கள்தான் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற முடியும். இதனைத் தவிர்க்கும் வகையில், இப்புதிய வீட்டுவசதித்

திட்டத்தின் கீழ், கூரை வீடுகளில் வசிப்பவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்காக வீடு ஒன்றிற்கான அலகுத் தொகையை **3.10 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக** உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. முதல் ஆண்டிலேயே, **3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 70,000 வீடுகளுக்கு ஒப்புதல்** அளிக்கப்படும். தகுதியான குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு, ஊரக வளர்ச்சித் துறையால் புதிதாக வீடுதோறும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

133. ஊரக வளர்ச்சித் துறை பல ஆண்டுகளாகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இருப்பினும், அவற்றில் பல திட்டங்களுக்கு இடையே பணிகள் ஒரே தன்மையில் இருப்பதும், ஒருங்கிணைந்த திட்டமிடல் இல்லாமையும் காணப்படுகிறது. எனவே, ஊரக வளர்ச்சித் துறையின் அனைத்து உட்கட்டமைப்புத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து '**தமிழ்நாடு கிராமப்புற அதிகாரமளித்தல், மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு**' (TN-VETRI) என்ற விரிவான திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம்,

கிராமப்புற இணைப்புச் சாலைகள் ஆகியவற்றிற்கென தனித் துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

134. நகர்ப்புரத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கான (Peri-urban Panchayats) அடிப்படைக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு வெற்றித் திட்டத்தின் (TN-VETRI) கீழ், 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு தனித் துணைத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், மலைப்பகுதி ஊராட்சிகளின் மேம்பாட்டிற்காக ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு தனித் துணைத்திட்டம் செயல்படுத்தப்படும். '**தமிழ்நாடு கிராமப்புற அதிகாரமளித்தல், மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்புத் திட்டம்**' ஆண்டிற்கு 6,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டம் பிற துறைகளின் தேவை மற்றும் வளங்களையும், ஒன்றிய அரசின் திட்டங்களையும் ஒருங்கிணைக்கும். இவ்வொருங்கிணைப்பை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான ஓர் உயர்மட்டக் குழு உறுதி செய்யும்.

135. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்**, தமிழ்நாடு திட்டத்தின் புதிய நிதிப் பங்கீட்டு முறையால் மாநிலத்தின் நிதிநிலைக்கு பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது. மொத்த திட்ட நிதியில் மாநில அரசின் பங்களிப்பாக, இதுவரை இல்லாத வகையில் 40 சதவீத நிதியினை ஏற்க வேண்டிய கட்டாயம் மாநில அரசிற்கு ஏற்பட்டுள்ளது. மாநில அரசு இந்த நிதிப் பங்கீட்டு முறையை மறுபரிசீலனை செய்யுமாறு ஒன்றிய அரசிடம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது. எனினும், ஊரக ஏழை மக்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை பெரிதும் சார்ந்திருப்பதைக் கருத்தில் கொண்டு, **மாநில அரசின் இதுவரை இல்லாத அளவிலான 5,057 கோடி ரூபாய் பங்களிப்புடன் மொத்தம் 12,642 கோடி ரூபாய் நிதி** ஒதுக்கீட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது.

136. மேலும், கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 150 நாட்கள் வேலைவாய்ப்பை வழங்கும் அரசின் கொள்கையை நிறைவேற்றும் நோக்கில், '**வெற்றி 150**' என்ற

முன்முயற்சியை அரசு செயல்படுத்தும். இதன் கீழ், 125 நாட்கள் வேலைவாய்ப்பை நிறைவு செய்துள்ள, நலிவுற்ற மற்றும் ஏழை, எளிய குடும்பங்களுக்குக் கூடுதலாக 25 நாட்கள் வேலைவாய்ப்பை அரசு வழங்கும். இதன் மூலம், அந்தக் குடும்பங்களுக்கு மொத்தம் 150 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்கிறது.

**மகளிர் சுயஉதவிக் குழுக்கள்**

137. தமிழ்நாட்டில் சுயஉதவிக் குழுக்கள் பல ஆண்டுகளாக வளர்ச்சி பெற்று சிறந்த நிலையை அடைந்துள்ளன. இருப்பினும், இனிவரும் காலங்களில் சுயஉதவிக் குழுக்களை குறுந்தொழில் நிறுவனங்களாக அடுத்தகட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலைக்கு உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு '**சிங்கப்பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம்**' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கும். இத்திட்டத்தின் கீழ், நிலையான தொழில்முனைவோரின் செயல்திறனை வெளிப்படுத்தும் ஒவ்வொரு சுயஉதவிக் குழு நிறுவனங்களுக்கும் 5 இலட்சம் ரூபாய் முதலீட்டு மானியம் வழங்கப்படும். மேலும், இந்த

ஆண்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 38,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் தருவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

138. சுயஉதவிக் குழுக்களுக்கு தற்போது கடன் மற்றும் மானியம் வழங்கும் முறை முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட முறையாக மாற்றியமைக்கப்படும். இணை தணிக்கை வசதியுடன் கூடிய இம்முறையின் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு கொடுக்கப்படும் நிதியானது எவ்வித காலதாமதமும் இன்றி அவர்களுக்கே சென்று சேர்கிறது என்பது உறுதி செய்யப்படும்.

139. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 39,609 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பொது விநியோகத் திட்டம்**

140. மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விளிம்புநிலையில் வாழும் சமூகத்தினருக்கு, பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் அவர்களது வீடுகளுக்கே சென்று வழங்கும் திட்டத்தை இந்த அரசு விரிவுபடுத்தி செயல்படுத்தும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த நிதியாண்டில் 7.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

141. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் உரிய அளவிலும், தரமான முறையிலும் பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில், இந்த ஆண்டில் பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் பொட்டலமிடப்பட்ட கோதுமை மாவு வழங்கும் முன்னோடித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இம்முன்னோடித் திட்டத்திற்காக 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டம் பின்னர் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

142. உணவு மானியத்திற்காக இந்த அரசு 14,000 கோடி ரூபாய் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்கிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு 14,830 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சட்டம் ஒழுங்கு**

143. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் இல்லாத ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதை இவ்வரசு இலக்காகக் கொண்டுள்ளது. இந்நோக்கத்தின் அடிப்படையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு '**பூஜ்ஜிய சகிப்புத்தன்மை**' என்ற உறுதியான கொள்கையை முதன்மையாகக் கொண்டு செயல்படுவதற்கு அரசு உறுதியாக உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, பெண்கள் தலைமையிலான காவல் பணிகள், அவசரகால நடவடிக்கை மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக '**சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை**' அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான காவலர்கள், கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள், பயிற்சி மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுக்காக 354 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது.

144. போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க, சட்டத்தை கடுமையாக அமல்படுத்துவதுடன், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

மாநிலத்தில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களைக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக, மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலகு வீதம் 37 அலகுகளும், நகர்ப்புரங்களில் 28 அலகுகளும் சேர்த்து மொத்தம் 65 '**போதைப்பொருள் தடுப்புப் பணிக்குழு**' அலகுகள் (Special Task Force for Interdiction of Narcotics and Gangs - STING) அமைக்கப்பட்டுள்ளன. போதைப்பொருட்களின் கடத்தல், விற்பனை மற்றும் தவறான பயன்பாடு தொடர்பாக, நிதி சார்ந்த புலன் விசாரணைகள் மேற்கொள்வதோடு, சொத்துகளை முடக்குதல் உள்ளிட்ட கடுமையான சட்ட நடவடிக்கைகளையும் இந்த அலகுகள் மேற்கொண்டு வருகிறது.

145. போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை உறுதிசெய்யும் நோக்கில், இந்த அரசு ஒரு '**மறுவாழ்வு நிதியை**' உருவாக்கும். இந்நிதிக்காக 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. போதைப்பொருள் மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து விடுபடவும், அதிலிருந்து மீண்டு வரவும், உதவி தேவைப்படும் நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவே இந்நிதி முதன்மையாகப் பயன்படுத்தப்படும்.

146. ஓர் புதிய '**சாலைப் பாதுகாப்புக் கொள்கை**' இந்த அரசால் வகுக்கப்படும். இந்தக் கொள்கையானது, நிறுவன அமைப்புகள், சாலை வடிவமைப்பு மற்றும் பொறியியல், போக்குவரத்து சட்ட அமலாக்கம், அவசரகால காய சிகிச்சை மற்றும் விழிப்புணர்வுக் கல்வி ஆகிய ஐந்து முக்கியத் தூண்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் விபத்து நிவாரண நிதித் திட்டத்திற்காக 2026-27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 200 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. மேலும், 2026-27 ஆம் நிதியாண்டில் பல்வேறு சாலை பாதுகாப்பிற்கான பணிகளை மேற்கொள்வதற்காக சாலைப் பாதுகாப்பு நிதியின் கீழ் 130 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

147. சட்டம் ஒழுங்கை சிறப்பாகப் பராமரிப்பதற்கும், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதை திறம்பட நிர்வகிப்பதற்கும், காவல் துறையினருக்கு போதுமான குடியிருப்பு வசதிகள் இன்றியமையாதவையாகும். இந்த நோக்கில், மாவட்டங்களில் காவல் துறையினருக்கான குடியிருப்பு வளாகங்களைக் கட்டுவதற்காக 431 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், மொத்தம் 5,000 காவலர் குடும்பங்கள் பயனடையும்.

148. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கு 17,290 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஆட்சி நிருவாகத்தை வலுப்படுத்துதல்**

149. முடிவுகள் விரைவாகவும், வெளிப்படையாகவும், அசைக்க முடியாத நேர்மையுடனும் எடுக்கப்படும் போதுதான் நிருவாகம் சிறந்த நிலையை எட்டும். கடந்த மூன்று மாதங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தூய்மையான, ஊழலற்ற மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவதற்காக உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். அரசு அடுத்த முக்கியமான கட்டத்திற்கு முன்னேற, மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சேவை வழங்குதலில் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற நவீன தொழில்நுட்பங்களின் மூலம் நமது அரசுப் பணியாளர்களுக்கு ஊக்கம் அளித்து, அவர்களின் செயல்திறனை

மேம்படுத்தி, அதன் மூலம் தடையற்ற அரசு சேவைகளை மக்களுக்கு வழங்க இயலும்.

150. முதலாவதாக, அதிகாரங்களை சார்நிலை அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் தேவையற்ற மையமயமாக்கலை அகற்ற முடியும். இதன்மூலம், ஒரு காலத்தில் ஊழலுக்கு வழிவகுத்த தடைகளை நீக்கி, குடிமக்கள் தங்களுக்குரிய சேவைகளை தாமதம் மற்றும் இடையூறுகள் இன்றிப் பெறுவதை நாம் உறுதிசெய்கிறோம். இரண்டாவதாக, இணையவழிப் பணிப் பகிர்வுகள் எளிமைப்படுத்தப்படுகின்றன. பொறுப்புணர்வை உறுதிசெய்ய, செயற்கை நுண்ணறிவின் துணையுடன் 'தர உத்தரவாத தணிக்கை வாரியம்' (Quality Assurance Audit Board) செயல்படும். இது, கோப்புகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்து, நியாயமற்ற நிராகரிப்புகளையும், நிலுவைகளையும் குறைக்கும். இறுதியாக, தொழில்நுட்பம் நமது பணியாளர்களுக்குப் பேருதவியாக அமையும். செயற்கை நுண்ணறிவு, சுயசிந்தனைப் பணிப்பாய்வுகள் (Agentic workflow) மற்றும் ஒலி-உரை மாற்றி திறன்கள் (Speeech to Text) ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், பணியாளர்கள் வரைவு

தயாரித்தல், விதிகளைத் தொகுத்தல், ஆவணப்படுத்தல் போன்ற வழக்கமான பணிகளுக்கு தானியங்கி உதவியைப் பெறுவார்கள். இதனால் வழக்கமான பணிகள் செய்வதற்கான நேரத்தினை சேமித்து, அதனை நமது அலுவலர்கள் தங்களது திறனை வளர்த்துக் கொள்ளவும், உயர் ஆளுமை முடிவுகளை எடுப்பதிலும் கவனம் செலுத்த முடியும்.

151. நமது இலக்கு எளிமையானது; ஊழலற்ற, வெளிப்படையான, தூய்மையான மற்றும் மிகவும் திறமையான நிருவாகம். இதில் தொழில்நுட்பம் அரசுப் பணியாளர்களுக்கு சேவையினை வழங்குகிறது. அதன்மூலம் அரசுப் பணியாளர்கள் மக்களுக்கு இணையவழியில், வெளிப்படைத்தன்மையுடன், குறித்த நேரத்திற்குள் சேவைகளை வழங்குகின்றனர். அரசின் சேவை வழங்கலை மாற்றியமைப்பதற்கும், நிருவாகப் பணிப் பகிர்வினை எளிமைப்படுத்துவதற்கும், தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஓர் '**ஆளுமைச் செயல்முறைகள் சீர்திருத்தக்** குழு' அமைக்கப்படும். மூத்த அரசு அலுவலர்கள், தொழில்துறை நிபுணர்கள் மற்றும் கல்விசார் நிபுணர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து, இக்குழு, ஆட்சிப்பணி

செயல்முறைகளை மறுசீரமைக்கும். தேவையற்ற விதிகளைப் பின்பற்றுதல் போன்றவற்றைக் களைந்து நவீன, தொழில்நுட்பத்துடன், குடிமக்கள் (G2C) மற்றும் வணிகத்திற்கு (G2B) உகந்த ஆளுமைச் சூழலை உருவாக்கும்.

152. அரசுத் துறைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களை உரிய நேரத்தில் நேர்மையாக வெளிப்படைத்தன்மையுடன் நிரப்பும் பொருட்டு, அனைத்துத் தேர்வு முகமைகள் மூலம் **ஆண்டு தேர்வுத் திட்டம் வெளியிடப்படும்**. மேலும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மூலம், பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதலில் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும். சட்டப்படி உரிய நேரத்தில் அனைவருக்கும் சேவைகள் கிடைக்கும் பொருட்டு **சேவை உரிமைச் சட்டம்** வடிவமைக்கப்பட்டு, இயற்றப்படும்.

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை**

153. பேரிடர் காலத்தில் கள அலுவலர்களுக்கு மீட்பு, நிவாரணம் மற்றும் துரித நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை உடனுக்குடன் வழங்கும் வகையில், பெருநிறுவனங்களின் சமூகப்

பொறுப்புணர்வு நிதி மூலமாக திரட்டடப்பட்ட 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், ஒருங்கிணைந்த இணைய முகப்பு வாயிலாக, பேரிடர் மீட்புக்கான சுழல் நிதி உருவாக்கப்படும். இதனால் பேரிடர்கள் திறம்பட கையாளப்படுவதுடன், விண்ணப்பங்கள் விரைந்து பரிசீலிக்கப்படுவதும் உறுதி செய்யப்படும்.

154. தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை காலமான ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மழைப்பொழிவு இயல்பைவிடக் குறைவாகவே பெய்துள்ளது. சூப்பர் எல்-நினோ (El Nino) வானிலை நிகழ்வின் காரணமாக இத்தகைய வறட்சியான சூழல் தமிழ்நாட்டில் நிலவி வருவதால், குடிநீர் ஆதாரங்களை பலப்படுத்துவதும், கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை வட்டார அளவில் சேமித்து வைப்பதும், இன்றியமையாத ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு, சூப்பர் எல்-நினோவின் (El-Nino) காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கையில் எவ்வித தடங்கலும் வந்து விடக் கூடாது என்பதற்காக, மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து 340 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

155. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக 5,462 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு 11,532 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**வணிக வரிகள் மற்றும் பத்திரப்பதிவு**

156. நேர்மையான, வெளிப்படையான மற்றும் நம்பிக்கையின் அடிப்படையிலான சரக்கு மற்றும் சேவை வரி (GST) நிர்வாகத்தை வழங்குவதில் இந்த அரசு உறுதியுடன் உள்ளது. நேர்மையாக வரி செலுத்துவோரை மாநிலத்தின் வளர்ச்சியில் உண்மையான பங்களிப்பாளர்களாகக் கருதி, அவர்கள் வணிகம் செய்வதை மேலும் எளிதாக்கும் வகையில், வணிக வரிகள் துறை சேவை சார்ந்த தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் மற்றும் நேரில் சந்திக்கத் தேவையில்லாத (Faceless) அணுகுமுறையை நோக்கிச் செல்லும். அதேவேளையில், திட்டமிட்டு வரி ஏய்ப்பு செய்வோர் மீது மட்டுமே உளவுத் தகவல்கள் அடிப்படையிலான கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

157. பொது ஆவணக் காப்பகமாகப் பதிவுத்துறை ஆற்றும் முக்கியப் பணியினை கருத்திற்கொண்டு ஆவணங்களைத் தடையின்றியும், எளிமையாகவும் பதிவு மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில் அரசு சிறப்பான சீர்திருத்தங்களை முன்னெடுப்பு செய்துள்ளது. பொதுமக்களின் வசதிக்காக மின்-புத்தாக்கத்தை (digital innovation) முன்னிறுத்தி சொத்துப் பதிவை எளிதாகவும், ஊழலற்றதாகவும் மாற்றுவதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. நிலம் வாங்கும் பொதுமக்களை மோசடிப் பதிவுகளிலிருந்து பாதுகாப்பது அரசின் தலையாய கடமையாகும். இதற்கென உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் முன்னணி மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, தேவையான சட்டத் திருத்தங்கள் மற்றும் விதிகள் இயற்றப்படும். மேலும், ‘**எங்கிருந்தும் பதிவு**’ இந்த அரசின் முக்கிய இலக்காக அமையும். இதன் மூலம், பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தபடியே ஆவணங்களை பதிவு செய்ய இயலும். அசையா சொத்து பரிவர்த்தனைகளுக்கான சட்டப்பூர்வப் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இன்றி, மேம்பட்ட மின்

ஆளுகை தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி. முற்றிலும் காகிதமில்லா மற்றும் நேரடி வருகையற்ற பதிவு முறை படிப்படியாக நடைமுறைப் படுத்தப்படும்.

158. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வணிக வரிகள் துறைக்கு 651கோடி ரூபாய் மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுத் துறைக்கு 475 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**இயற்கை வளங்கள்**

159. மாநிலத்தில் சட்டவிரோத சுரங்க மற்றும் குவாரி நடவடிக்கைகளைத் தடுக்கவும் மற்றும் அரசுக்கு வந்து சேர வேண்டிய வருவாய்கள் எவ்வித கசிவுகளும் இன்றி அரசின் கருவூலத்தில் செலுத்தப்படுவதை உறுதிசெய்யவும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். இந்த அரசு பதவியேற்ற கடந்த 3 மாதங்களில், சட்டவிரோத கனிமக் கடத்தலில் ஈடுபட்ட 1,307 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 1,161 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளுக்கு எதிரான

சிறப்பு நடவடிக்கையின் மூலம், 431 குவாரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 155 குவாரிகளில் விதி மீறல்கள் கண்டறியப்பட்டு, அந்தக் குவாரிகள் மீது சட்டரீதியிலான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலம் முழுவதும் உள்ள க்ரஷிங் யூனிட்கள் மற்றும் கிடங்குகளை ஆய்வு செய்ய சிறப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

160. மாநிலத்தில் கனிமவள மேலாண்மையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், கனிமங்களின் உற்பத்தி மற்றும் நகர்வை நிகழ்நேரத்தில் கண்காணிக்கும் ஒரு முழுமையான கனிம மேலாண்மை அமைப்பு நிறுவப்படும். திறமையான கனிமவள நிர்வாகத்திற்கான தொழில்நுட்பம் சார்ந்த, வெளிப்படையான மற்றும் ஒருங்கிணைந்த இக்கட்டமைப்பு, மாநிலத்தின் கனிமவளத்தை நிலைத்தன்மையுடன் பயன்படுத்தப்படுவதையும், சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளைத் தடுத்து, வருவாயைப் பெருக்குவதையும் உறுதி செய்யும். மேலும், கண்காணிப்பை வலுப்படுத்தி சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில், மாவட்ட அளவிலான விழிப்புப் பணி மற்றும் அமலாக்கப்

பிரிவுகளும் நிறுவப்படும். மேற்கண்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, 2026-27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

161. புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் கிரானைட் தொழிலை வளர்க்கும் நோக்கில், கிரானைட் பாலிஷிங் மற்றும் வடிவமைப்பு மையங்கள் நிறுவப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பு ஆண்டில் தயாரிக்கப்படும். இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இயற்கை வளங்கள் துறைக்கு 438 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**அரசு ஊழியர் நலன்**

162. அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களின் தகுதியுடைய குடும்ப உறுப்பினர்கள், ஓய்வூதியதாரர்கள் (துணைவியர் உட்பட) மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்காக, 01.07.2026 முதல் 30.06.2031 வரை ஐந்து ஆண்டு காலத்திற்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின் கீழ், அடிப்படை காப்பீட்டுத் தொகை

5 இலட்சம் ரூபாயிலிருந்து 7.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நோய்களுக்கான காப்பீட்டுத் தொகை 10 இலட்சம் ரூபாயிலிருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அரிய மற்றும் குறிப்பிட்ட நோய்களுக்கு ஊழியர்களுக்கான திரள் நிதி உதவித் தொகை 10 இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2,992 மருத்துவ சிகிச்சை நடைமுறைகள் மற்றும் 46 குறிப்பிட்ட தீவிர நோய்களுக்கான சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் 1,535 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவ நிறுவனங்கள் மூலம் சிகிச்சை பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு ஊழியர்களின் நலனின் எப்போதும் துணை நிற்கும் நமது அரசானது இந்த காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த 838 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளுக்கு 47,240 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**நீதி நிருவாகம்**

163. நீதிமன்றங்கள் நீதியை நிலைநாட்டுவதிலும், மக்களுக்கு நீதியினை விரைவாகக் கிடைக்கப் பெறச் செய்வதிலும் இன்றியமையாத ஒன்றாகும். மக்கள் அன்றாடம் அணுகும் நீதிமன்றங்களுக்கு நவீன உட்கட்டமைப்பை வழங்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள நமது அரசானது, சென்னை பிராட்வேயில் 1,375 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 160 நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தினை அமைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கும். இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கத் தேவையான முன்நடவடிக்கைகளுக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீதி நிருவாகத் துறைக்கு 2,486 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சுற்றுலா**

164. தமிழ்நாட்டின் செழுமையான பாரம்பரியம், துடிப்பான கலாச்சாரம் மற்றும் பல்வேறு இயற்கைக் காட்சிகள் சுற்றுலாவை பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும்

உள்ளூர் மக்கள் மேம்பாட்டிற்கான ஒரு முக்கியமான காரணியாக மாற்றுகின்றன. சுற்றுலாத் துறையில் முதலீடு செய்வது உள்ளூர்வாசிகளின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதோடு, நமது கலாச்சார அடையாளத்தைப் பாதுகாத்து, மாநிலம் எங்கும் உட்கட்டமைப்பு வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது.

165. சுற்றுலா உட்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான நம்பகமான, நீண்டகால நிதி ஆதாரத்தை உறுதி செய்வதற்காக, ஒரு பிரத்யேக '**நிலையான சுற்றுலா வளர்ச்சி நிதியை**' இந்த அரசு உருவாக்கும். இந்தச் சட்டப்பூர்வ நிதியை உருவாக்குவதற்கான சட்ட முன்வடிவு நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். இது நிதி ஆதாரங்களை தடையின்றி திரட்டவும், தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கவும், மாநிலம் முழுவதும் எதிர்கால சுற்றுலாத் திட்டங்களுக்கு நிலையான நிதியளிப்பை உறுதி செய்யவும் வழிவகுக்கும்.

166. நமது வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் தொலைநோக்குப் பார்வையின் கீழ், மாமல்லபுரத்தை ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக அரசு

முழுமையாக மேம்படுத்தும். இத்திட்டத்தைச் செயல்படுத்த, இலக்கு மைய மேம்பாட்டுக்கான (destination development) ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் 200 கோடி ரூபாய் மானியம் பெறுவதற்காக, ஒன்றிய அரசுக்கு விரிவான திட்டம் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த உத்திசார்ந்த முதலீடு உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா வசதிகளை மேம்படுத்தி, போக்குவரத்து வசதிகளை அதிகரித்து, உலகச் சுற்றுலா வரைபடத்தில் தமிழ்நாட்டின் இடத்தை வலுப்படுத்தும்.

167. தமிழ்நாட்டில் நதிச் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்தின் மூன்று முக்கிய நதிகளில் நதிச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 53 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது, காவிரி நதியில் ஒகேனக்கல் முதல் திருவரங்கம் வரையிலும், வைகை நதியில் மதுரையிலும் மற்றும் தாமிரபரணி நதியில் பாபநாசம் முதல் திருநெல்வேலி வரையிலும் அமைக்கப்படும். மேலும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் உணவு மற்றும் கலைப் பண்பாட்டை பிரபலப்படுத்தும் நோக்கில், மாநிலத்தின் உணவுச் சுற்றுலா வழித்தடங்களை வெளிக்கொணரும் திட்டத்தை **உணவு மற்றும் கலைத்**

**திருவிழாவாக** இந்த அரசு 20 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தும்.

168. சமூக நலன் மற்றும் ஆன்மீகச் சுற்றுலாவினை ஊக்குவிக்கும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும், மூத்த குடிமக்கள் தமிழ்நாட்டில் அவர்கள் விரும்பும் புனிதத் தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர். குளிர்சாதன பயணம், வசதியான தங்குமிடம் மற்றும் தரமான உணவு உள்ளிட்ட வசதிகள் வழங்கப்படும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், ஆன்மீகப் பயணிகளின் வசதிக்காக, திருக்கடையூர், நாகூர் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இடங்களில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓய்வு இல்லங்கள் நிறுவப்படும். இதன் மூலம் ஆன்மீகப் பயணிகள் பாதுகாப்பான மற்றும் வசதியான தங்குமிடத்துடன் இறையருளைப் பெற முடியும்.

169. சுற்றுலாத் தலங்களையும் இயற்கை சார்ந்த சுற்றுலா மையங்களையும் மேம்படுத்தி விரிவுபடுத்தும் நோக்கில், இந்த அரசு '**சூழல் சுற்றுலா இயக்கம்**' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தும்.

இத்திட்டத்தின் கீழ், மலையேற்றப் பாதைகள், வனவிலங்கு சுற்றுலாக்கள், பறவைகளைப் பார்வையிடும் பாதைகள் மற்றும் படகு சவாரிப் பாதைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த தங்குமிட வசதிகள், வழிகாட்டி மையங்கள் / பார்வையாளர் மையங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்படும். மாநிலத்தின் பல்வேறு இயற்கை நிலப்பரப்புகள், வனங்கள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புப் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில், உள்ளூர் மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் பங்கேற்புடன் இந்த இயக்கம் செயல்படுத்தப்படும். உள்ளூர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதுடன், வனப் பாதுகாப்பிற்கும் பங்களித்து, பொதுமக்களிடையே இயற்கை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் இத்திட்டத்திற்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**கலை மற்றும் பண்பாடு**

170. தமிழரின் தனித்துவமான வரலாற்றையும் வளமான பாரம்பரியத்தையும் வெளிக்கொணர்ந்து பாதுகாக்கும் நோக்கில், கிழக்கு கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுத் தலங்களின் தரம் உயர்த்தப்படும். இதற்கான விரிவான

திட்ட அறிக்கையினை தயார் செய்வதற்கு, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

171. இந்த அரசு '**நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ்வாதாரப் பாதுகாப்புத் திட்டத்தை**' அறிமுகப்படுத்தும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஆண்டும், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, சிறந்த முறையில் செயல்படும் 200 கலைக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 100 நாட்களுக்கு பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுற்றுலா - கலை மற்றும் பண்பாட்டுத் துறைக்கு 775 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**தமிழ் வளர்ச்சி**

172. தமிழின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும் இளைஞர்களின் திறமைகளை ஊக்குவிப்பதிலும் நமது அரசு உறுதியான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. செம்மொழியான தமிழ்மொழியின் இலக்கியத்தின் மீது இளம் வயதிலேயே

பற்றுணர்வை வளர்க்கும் நோக்கில், 300 திருக்குறள்களை மனனம் செய்து ஒப்புவிக்கும் 500 தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு தலா 5,000 ரூபாய் ஊக்கத்தொகையினை அரசு வழங்கும். மேலும், தமிழ் அறிஞர்களுக்கான நிதி உதவியை அரசு உயர்த்தி வருவதுடன், தமிழ்மொழித் தியாகிகளின் ஒப்பற்ற பங்களிப்பினை நினைவுகூறும் வகையில், கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளை அரசு தொடர்ந்து நடத்தும்.

173. கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் வரலாற்றுப் பெருமையைப் போற்றும் வகையிலும், தமிழ்மொழி மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினைக் கொண்டாடும் வகையிலும் ஒரு புதிய விருது ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்றும் காயிதே மில்லத் அவர்களின் நினைவாக வழங்கப்படும்.

174. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மூலம் '**தமிழ்ப் பெருந்திரள் மொழி மாதிரி**' (Large Language Models) உருவாக்குதல், அரசின் அதிகாரப்பூர்வ தொடர்புகளை செயற்கை நுண்ணறிவு சார்ந்த மொழித் தொழில்நுட்பக் கருவிகளைக்

கொண்டு செயல்படுத்துதல் மற்றும் முன்னணி பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தமிழுக்கென பிரத்தியேகமான செயற்கை நுண்ணறிவு மாதிரி உருவாக்குதல் ஆகியவை முன்னெடுக்கப்படும்.

175. உலகப் புகழ்பெற்ற தொல்லியல் தலங்களையும், பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான பண்பாட்டு மரபையும், நகர நாகரிகத்தையும் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. புத்தக அறிவுடன் கள அறிவும் வேண்டும் எனும் நோக்கத்தில், பள்ளி மாணவர்கள் கீழடி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, சிவகளை, அழகன்குளம், அரிக்கமேடு, சாளுவன்குப்பம் மற்றும் காவேரிப்பூம்பட்டினம் போன்ற தமிழ்நாட்டின் தொல்லியல் மற்றும் பாரம்பரிய தலங்களை பார்வையிடுவது அவசியமாகும். இது, அனுபவம் சார்ந்த கற்றலை ஊக்குவிப்பதுடன், மாநிலத்தின் தொன்மையான வரலாறு, நாகரிகம் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியம் குறித்த அவர்களது புரிதலையும் வலுப்படுத்தும். இந்த நோக்கில், பள்ளி மாணவர்களுக்கு தொல்லியல் தலங்கள் மற்றும் உயர்கல்வி

நிறுவனங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்காக இந்த அரசு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

**இந்து சமய அறநிலையம்**

176. இந்த அரசு எதிர்வரும் ஐந்தாண்டுகளில் 3,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து திருக்குடமுழுக்கு நடத்திடவும், 250 திருக்குளங்களை செப்பனிடவும், 75 மரத் தேர்களை சீரமைக்கவும் திட்டமிட்டுள்ளது. மேலும், பக்தர்கள் அதிக அளவில் வருகை புரியும் திருக்கோயில்களில் அவர்களின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பாதுகாப்பான குடிநீர், கழிவறைகள், குளியலறைகள், தங்கும் விடுதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும் திட்டமிட்டுள்ளது. திருக்கோயில்களில் நிர்வாக அறங்காவலர்களின் நியமனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இவ்வரசு பொறுப்பேற்ற உடன் மிகக் குறுகிய காலத்தில் விரைவாக 9,205 திருக்கோயில்களுக்கு அறங்காவலர் அறிவிப்பு வெளியிட்டு, அறங்காவலர்களை நியமனம் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. 418 கோடி ரூபாய் அரசின் நிதி ஒதுக்கீட்டில், ஆயிரம் ஆண்டுகள் பழமையான 213 திருக்கோயில்களை புனரமைத்துப்

பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இத்துறையில் பல்வேறு கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வரும் இந்த அரசானது, திருக்கோயில்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்து சமய அறநிலையத் துறைக்கு 708 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## பகுதி-ஆ

## மாநில அரசின் நிதிநிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

177. இதுவரையிலான எனது உரையில், இந்த அரசின் முக்கியத் திட்டங்களை நான் எடுத்துரைத்துள்ளேன்.

178. இறுதியாக, இந்த அரசு மாநில நிதிநிலை குறித்து கடந்த மாதம் 16 ஜூன் 2026 அன்று வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் மாநிலத்தின் உண்மையான நிதிநிலையையும், மோசமான நிர்வாகம் மற்றும் வருவாய் வசூலிக்கும் துறைகளில் ஏற்பட்ட கசிவுகள் காரணமாகவும், மேற்கொள்ளப்பட்ட செலவினங்களால் மாநில அரசும் அதன் வழி நிறுவனங்களும், அதாவது, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வழி நிறுவனங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் மிக அதிக அளவில் கடன் பெற நேர்ந்ததால் ஏற்பட்ட நிதி நெருக்கடியையும் தெளிவாகவும் உண்மையாகவும் வெளிக்கொணர்ந்தது. வருவாய் எந்த அளவு ஈடுசெய்யும் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் மாநிலம் கடன்

பெற்று வந்துள்ளது. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு உந்துசக்திகளாக விளங்கும் மனிதவளம் மற்றும் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதற்காகக் கடன் பெறுவதில் தவறில்லை என்றாலும், அக்கடன்களை ஈடுசெய்யக்கூடிய வளங்களைத் திரட்டும் முயற்சிகளும் அதனுடன் இணைந்திருந்திருக்க வேண்டும். இந்த எளிய உண்மையை முந்தைய அரசு உணரத் தவறியது.

179. வருவாய் ஈட்டும் துறைகளில் பெரிய அளவிலான வருவாய் இழப்பினை முந்தைய அரசு அனுமதித்த அதே நேரத்தில், அரசின் கொள்முதல்கள் மற்றும் ஒப்பந்தங்களில் கணிசமான பங்கை நேர்மையற்ற இடைத்தரகர்கள் சுரண்டிச் செல்லவும் அனுமதித்தது. நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு அமைந்தவுடன், வருவாய் மற்றும் செலவினம் ஆகிய இரு பக்கங்களிலும் ஏற்பட்ட கசிவுகளை அடைக்க நாங்கள் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் வருவாய் இனத்தில் இதுவரை குறைந்தபட்சம் 1,500 கோடி ரூபாயை உருவாக்க மாநில அரசால் முடிந்துள்ளது. மேலும், அரசின் கொள்முதல் மற்றும்

ஒப்பந்தங்களில் ஏற்படும் வீண் செலவினங்கள் குறைவதன் காரணமாக, செலவினத்திலும் பெரிய அளவில் சேமிப்பு உருவாகும் என எதிர்பார்க்கிறோம்.

180. வெள்ளை அறிக்கையை நான் சமர்ப்பித்தபோது கூறியதை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் தலைமையின் கீழ் இயங்கும் இந்த அரசு, மாணவர்களுக்கான இலவசக் கல்வி மற்றும் உதவித்தொகைகள், தொழில் முனைவோருக்கு தொழில் மற்றும் உற்பத்தியைத் தொடங்குவதற்கு வழங்கப்படும் மானியங்கள், பொது விநியோகத் திட்ட மானியங்கள், ஏழைகளுக்கான இலவச வீட்டுவசதி போன்ற நலத்திட்டங்கள் வெறும் தாராள மானியங்கள் அல்ல. மாறாக, நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் இயக்கும் மனித மற்றும் சமூக மூலதனத்தில் செய்யப்படும் முதலீடுகளே என்று நம்புகிறது. உண்மையில், கடந்த மூன்று தசாப்தங்களாக அமலில் உள்ள பொதுநலத் திட்டங்களில் பெரும்பாலானவற்றை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதுடன், அவற்றை மேலும் விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது.

எனினும், மனிதவள மேம்பாட்டிற்காகச் செய்யப்படும் முதலீடுகளுக்கும், உள்கட்டமைப்பில் செய்யப்படும் முதலீடுகளுக்கும் இடையே கச்சிதமான சமநிலை அவசியம். இவை அனைத்திற்கும் போதிய நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன, இது குறித்து அரசு தொடர்ச்சியாக முயற்சி எடுக்காவிட்டால், நலத்திட்டங்களை எவ்வித தடங்கலுமின்றி தொடர்வது இயலாத ஒன்றாகிவிடும்.

181. நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, கூடுதல் வருவாயை ஈட்டுவதற்கு இந்த அரசு பல முன்முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் விளைவாக 15,000 கோடி ரூபாய் கூடுதல் வருவாயை நம்மால் அடைய முடியும். மேலும், புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் திரு. மாண்டேக் சிங் அலுவாலியா (Thiru. Montek Singh Ahluwalia) அவர்களின் தலைமையில் ஓர் உயர்நிலை '**வருவாய் மேம்பாட்டுக் குழுவை**' நாங்கள் அமைத்துள்ளோம். மாநிலத்தின் மக்கள் நலத் திட்டங்கள் மூலமாக வழங்கும் சேவைகளின் திறனை மேம்படுத்துவதன் மூலம் செலவினத்தைச் சீரமைப்பது குறித்தும், அனைத்து நலத்திட்டங்களையும் அத்திட்ட பயனாகளின் மீதான

நேர்மறையான தாக்கத்தை மதிப்பிட்டு மறுஆய்வு செய்வது குறித்தும், அரசின் திட்டங்கள் தேவைப்படும் அனைத்து மக்களும் உண்மையிலேயே பயனடைவதை உறுதிசெய்வது குறித்தும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக, இதேபோன்ற ஓர் **உயர்நிலை செலவின சீர்திருத்தக் குழுவையும்** நாங்கள் அமைக்கவுள்ளோம். இக்குழுவின் பணிக்களம் செலவினத்தைக் குறைப்பதோடு மட்டும் நின்றுவிடாது. மாறாக அதைச் சீரமைப்பதே ஆகும். நீண்டகாலத்தில் சமூகத்திற்கும் மாநிலத்திற்கும் நல்ல நேர்மறையான விளைவுகளையும் பயன்களையும் தரும் நலத்திட்டங்களை விரிவுபடுத்துவதும் இதில் அடங்கும் என்பதை இங்கு நான் தெளிவுபடுத்த வேண்டும்.

182. மாநிலத்தின் நிதிநிலை, நிலையில்லாமல் உள்ளது. கடன் சுமையால் நிரம்பியும், குறைந்தபட்ச வருவாயுடனும், கசியும் ஓட்டைகளுடனும் கூடிய கருவூலப் பெட்டி எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சீரமைப்புப் பணி தொடங்கப்பட்டுவிட்டது. எனினும், நிதி நிர்வாகத்தை மீண்டும் நிதி ஒருங்கிணைப்பு (Fiscal Consolidation) பாதைக்குக் கொண்டுவர குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் தேவைப்படும். நமது மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், அரசியல் களத்தில் நமது முந்தைய அனைத்து முயற்சிகளிலும் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம். இந்த முயற்சியிலும் நாங்கள் '**வெற்றி**' பெறுவோம். சமச்சீரான, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான நிதி ஒருங்கிணைப்புடன் கூடிய நல்லாட்சியைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்து விளங்கும். தமது ஐந்தாண்டு பதவிக்காலத்தை மட்டுமே சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையுடன், குறுகியகால அரசியல் ஆதாயங்களில் மட்டுமே கவனம் செலுத்திய முந்தைய அரசைப் போலன்றி, நிலையான கொள்கைகள் மற்றும் தூய்மையான, திறமையான நல்லாட்சியை வழங்குவதன் மூலம் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் தொடர்ச்சியான வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்று நமது அரசு நம்புகிறது.

183. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (IBE) 2026-27ன் 2,29,579 கோடி ரூபாய் கணிப்புடன் ஒப்பிடுகையில் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (RBE) 2026-27ல், 2,26,740 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டில்,

வணிக வரிகள் 1,56,176 கோடி ரூபாயும், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு 35,109 கோடி ரூபாயும், மோட்டார் வாகன வரி 14,861 கோடி ரூபாயும், மாநில கலால் வரி 14,164 கோடி ரூபாயும் அடங்கும். முந்தைய மிகைமதிப்பீடுகள் மாநிலத்தின் நிதி மேலாண்மை குறித்த வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு இணங்க, கணிப்புகள் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சரியான அளவில் கணிக்கப்பட்டுள்ளன. 2025–26ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டை விட, 2026–27 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 9.78 சதவீத வளர்ச்சி அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

184. மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 2025-26 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் இருந்த 26,265 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில், இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (IBE) 2026–27ல் 27,704 கோடி ரூபாயாக இருந்தது. இது திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல், 27,835 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத்தில், மாநிலத்தின் சொந்த

வருவாய்கள் 2,54,575 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளன. இது திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் மொத்த வருவாய் வரவுகளில் 72.73 சதவீதமாகும்.

185. ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (IBE) 2026-27ல் 24,762 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குப் பதிலாக, ஒன்றிய அரசு '**வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்**' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 60:40 பங்கீட்டு முறையில் 7,586 கோடி ரூபாய் ஒன்றிய அரசிடமிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையான 3,461 கோடி ரூபாயும் 2026-27ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய அரசிடமிருந்து

பெறப்படும் உதவி மானியங்கள் 32,922 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

186. ஒன்றிய வரிகளில் மாநிலத்தின் பங்கு, திருத்த மதிப்பீடுகள் 2025-2026-ல் 56,819 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டது. ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெற்ற ஒதுக்கீட்டின் அடிப்படையில், இது இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026–27-ல் 62,531 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டது. இதே தொகை, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2026–27-லும் தக்கவைக்கப்பட்டுள்ளது.

187. மொத்தத்தில், 2025–26-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 3,09,698 கோடி ரூபாயாகவும், 2026–27-ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,44,575 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்ட மொத்த வருவாய் வரவுகள், 2026–27-ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடுகளில் 3,50,027 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட 5,452 கோடி ரூபாய் உயர்வு.

188. செலவினங்களைப் பொறுத்தமட்டில், மொத்த வருவாய்ச் செலவினம் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27-ல் இருந்த 3,93,272 கோடி ரூபாயிலிருந்து, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27-ல் 4,05,802 கோடி ரூபாயாக உயர்த்தி மதிப்பிடப்பட்டுள்ளது. புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்களான விவசாயப் பயிர்க் கடன் தள்ளுபடி, 200 யூனிட் இலவச மின்சாரம், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் ஆகியவற்றிற்கான கட்டாய ஒதுக்கீடுகள் அதிகரித்ததால் மானியங்கள் மற்றும் நிதிமாற்றங்கள் உயர்ந்துள்ளன.

189. 2026-27-ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 59,562 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்ட ஒட்டுமொத்த மூலதனச் செலவினம், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27-ல் 56,985 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட மாநிலத்தின் மொத்த மூலதன ஒதுக்கீடு, திருத்த வரவு-செலவு திட்ட மதிப்பீடுகள் 2026-27-ல் 66,060 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

190. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026–27-ல் வருவாய் பற்றாக்குறை 48,696 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது. வருவாய் வரவுகளை மிகையாக மதிப்பிட்டதன் மூலமும், வருவாய்ச் செலவினத்தைக் குறைவாக மதிப்பிட்டதன் மூலமும், இது குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026–27-ல் வருவாய் பற்றாக்குறை 55,775 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

191. திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026–27-ல் நிதிப் பற்றாக்குறை, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026–27-ல் இருந்த 1,21,949 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில், 1,21,819 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு நிதிப் பொறுப்புச் சட்டம் 2003-ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்குள் இருக்கும்.

192. மாநிலத்தின் ஒட்டுமொத்த நிலுவைக் கடன் பொறுப்புகள், 2026-27 ஆம் ஆண்டு இடைக்கால

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டிருந்த 10,99,458 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில், 2026-27 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,98,768 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலுவைப் பொறுப்புகளில் மாநிலத்தின் பொதுக் கடன் மற்றும் பொதுக் கணக்குப் பொறுப்புகள் ஆகியவை அடங்கியுள்ளன. மேலும், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக பெறப்பட்ட 9,523 கோடி ரூபாயும் இந்நிலுவைப் பொறுப்புகளில் அடங்கியுள்ளது. இத்திட்டம் ஒன்றிய அரசுத் துறைத் திட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், ஒன்றிய அரசின் கணக்குகளில் உரிய கணக்கு சரிகட்டல்கள் மேற்கொள்ளப்படும்போது, நிலைப் பெறுப்புகள் 9,523 கோடி ரூபாய் குறையும்.

193. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (GSDP) நிலுவைப் பொறுப்புகளின் விகிதம், 2026-27 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டிருந்த 27.03 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2026-27 ஆம் ஆண்டு

திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 27.01 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

194. வரி வசூலில் ஏற்படும் கசிவுகளை அடைத்து, வசூல் திறனை மேம்படுத்தி, வருவாய் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சியை அதிகரிக்க உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். மாநிலத்திற்கு, ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படவேண்டிய உதவி மானியத்தினை உரிய அளவில் பெற நமது அரசு முயற்சி செய்யும். இந்நடவடிக்கைகளின் மூலம், வரும் ஆண்டுகளில் வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக மூலதனச் செலவினம் அதிகரித்து, விரும்பத்தக்க வளர்ச்சி எட்டப்படும்.

195. தனது நிதி ஆரோக்கியத்தை மீட்டெடுக்கத் தேவையான பொருளாதார வலிமையையும், ஆழமான நிறுவனக் கட்டமைப்பையும், மனிதவளத்தையும் தமிழ்நாடு

பெற்றுள்ளது. நிதிச் சிக்கல்களைத் துல்லியமாகப் புரிந்துகொண்டு செயல்படும் இந்த அரசு, முறையான வருவாய்த் திரட்டல், நேர்த்தியான செலவின மேலாண்மை, தூய்மையான, ஊழலற்ற நல்லாட்சி ஆகியவற்றின் மூலம் அவற்றைத் தீர்க்க உறுதி பூண்டுள்ளது.

196. இந்தத் திருத்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அயராது உழைத்த நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மு.அ.சித்திக், இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதித்துறையின் பிற அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

197. இந்த திருத்த வரவு-செலவுத் திட்டத்தை வடிவமைப்பதில் தமது விலைமதிப்பற்ற வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் வழங்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

198. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2026-27ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

வெல்க தமிழ்நாடு!

**முனைவர் நெ. மரிய வில்சன்**

நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்

துறை அமைச்சர்

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-இன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)-இன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, 2026-27 ஆம் ஆண்டு முதல் 2028-29 ஆம்

ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் சமர்ப்பிக்கப்படுகிறது.

## I. வருவாய் வரவுகள்

ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள் மற்றும் நிதி மாற்றங்கள் உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டிருந்த 3,44,575 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 3,50,027 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளன. இது 2027-28ல் 3,95,386 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 4,46,803 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இவை முறையே 12.95 சதவீதம் மற்றும் 13.00 சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றன. இவ்வினங்களுக்கான முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 1. மாநிலத்தின் சொந்த வரி வருவாய்

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 2,29,579 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது. இது திருத்த வரவு-செலவுத் திட்ட

மதிப்பீடுகள் 2026-27ல் 2,26,740 கோடி ரூபாயாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சரிவு எந்தவொரு பொருளாதார கட்டமைப்பு பலவீனத்தினாலும் அல்ல, மாறாக நிர்வாகச் சீர்கேடு மற்றும் வணிக வரிகள், மாநில கலால் வரி, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு மற்றும் சுரங்கம் ஆகிய வருவாய் ஈட்டும் இனங்களில் ஏற்பட்ட வருவாய் கசிவுகளினால் உண்டானதாகும். அதற்கிணங்க, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை விட (IBE) திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் (RBE) 2,839 கோடி ரூபாய் குறைந்துள்ளது. மது சில்லறை விற்பனை, சுரங்கம் மற்றும் பதிவுத்துறை ஆகியவற்றில் ஏற்படும் கசிவுகளை அடைத்தல், வருவாய் பெருக்க நடவடிக்கைகள் மற்றும் மேம்பட்ட நிர்வாகம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மாநிலத்தின் சொந்த வரிவருவாய் போக்கு சீரடைந்து இம்மதிப்பீடு 2027-28ல் 2,58,483 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 2,94,671 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் வளர்ச்சி விகிதம் 2027-28 மற்றும் 2028-29ல் 14 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2. மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்

மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 27,835 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான 27,704 கோடி ரூபாயைவிட சற்றே அதிகரித்துள்ளது. மாநிலத்தின் வரி அல்லாத வருவாய் 2027-28ல் 30,062 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 32,467 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

## 3. ஒன்றிய வரிகளில் மாநில அரசின் பங்கு

ஒன்றிய அரசு வரிகளில், தமிழ்நாட்டின் பங்கு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டவாறே, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2026-27ல் 62,531 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஒன்றிய அரசு வரவு-செலவுத் திட்டம் 2026-27-இன் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது. 2027-28 மற்றும் 2028-29- ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி வீதம் 14 சதவீதமாக இருக்குமென கருதி, ஒன்றிய அரசின்

வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு முறையே 71,285 கோடி ரூபாயாகவும், 81,265 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

## 4. ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்

ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 32,922 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது, இம்மதிப்பீடானது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றிய அரசின் 'வளர்ச்சியடைந்த பாரதம் – கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்' (VB-G RAM-G)' திட்டத்திற்கான நிதியும், முந்தைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிலுவைத் தொகையும் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் என எதிர்பார்த்து, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் இருந்த 24,762 கோடி ரூபாய் மதிப்பீட்டை விட உயர்த்தப்பட்டுள்ளது. ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் 2027-28ல் 35,555 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 38,400 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

## II. வருவாய்ச் செலவினம்

வருவாய்ச் செலவினம் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 4,05,802 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ஐ விட 3.19 சதவீதம் அதிகம். வருவாய்ச் செலவினம் 2027-28ல் 4,49,319 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 4,97,860 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்படுகின்றன:

- ஊதியங்களுக்கான செலவினம் என்பது ஒரு உறுதிசெய்யப்பட்ட செலவினமாகும். இது 2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் 94,378 கோடி ரூபாயாக கணிக்கப்பட்டிருந்த நிலையில் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 91,032 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் புதிய பணியமர்த்தல்களின் அடிப்படையில், ஊதியங்களுக்கான செலவினம்

2027-28ல் 1,01,046 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 1,12,161 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

- ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நலன்களுக்கான உறுதிசெய்யப்பட்ட செலவினம் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 41,846 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஓய்வுப் பெறுபவர்களின் எண்ணிக்கை போக்குகளைக் கருத்தில் கொண்டு இச்செலவினம் 2027-28ல் 46,030 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 50,633 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

- ஊதியம் அல்லாத செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புகள் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 19,698 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினம் 2027-28ல் 21,274 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 22,976 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இது 8 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

- மானியங்கள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான செலவினம் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல்

1,74,494 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செலவினம் 2027-28ல் 1,91,219 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 2,09,780 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

- முந்தைய ஆண்டுகளில் திரட்டப்பட்ட பொதுக் கடனுக்கான வட்டி செலுத்துதல்கள் அரசின் உறுதிசெய்யப்பட்ட பொறுப்பாகும். இது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. வட்டி செலுத்துதல்களுக்கான செலவினம் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 78,683 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செலவினம் 2027-28ல் 89,698 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 1,02,256 கோடி ரூபாயாகவும் மேலும் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கு

திருத்த வரவு-செலவுத் திட்டம் 2026-27ல் மூலதனச் செலவினம் 56,985 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய அரசு மூலதனச் செலவினத்திற்கு அதிகம் செலவிடும் என எதிர்பார்க்கப்படுவதால், இது 2027-28ல் 68,382 கோடி ரூபாயாகவும்,

2028-29ல் 83,426 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது. இது நிதி ஒழுக்கத்தைப் பேணி, வளர்ச்சி சார்ந்த செலவினங்களை மேம்படுத்துவதில் மாநில அரசின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2026-27ல் 9,075 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளன. இவை 2027-28ல் 10,891 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 13,287 கோடி ரூபாயாகவும் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## IV. வருவாய் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

வருவாய் பற்றாக்குறை திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் 55,775 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேம்பட்ட வரி நிர்வாகம் மற்றும் வசூல் திறன் உள்ளிட்ட வருவாய் பெருக்க நடவடிக்கைகளின் விளைவாக, இது 2027-28ல் 53,933 கோடி ரூபாயாகவும், 2028-29ல் 51,058 கோடி ரூபாயாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது; இதன்மூலம் மாநிலத்தில் மூலதனச் செலவினத்திற்குக் கூடுதல் இடம் உருவாகும்.

திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2026-27ல் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின்

விகிதம் 3.00 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. வருங்காலத்தில், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் விகிதம் 2027-28ல் 2.87 சதவீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது. 2028-29ல், இது 2.80 சதவீதமாகக் மேலும் குறைந்து தமிழ்நாடு நிதிப் பொறுப்புச் சட்டம் 2003-ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்குள் இருக்கும்.

## V. பொதுக் கடன் மற்றும் பொறுப்புகள்

கடன்களைப் பெறுதல் மற்றும் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான மதிப்பீடுகள், இந்திய அரசு நிர்ணயித்த ஒட்டுமொத்த கடன் வரம்பின் அடிப்படையில் இறுதிசெய்யப்பட்டுள்ளன. பொதுக்கடன்களை பொறுத்தமட்டில் இவ்வரசு 2026-27ல், மொத்தம் 1,73,445 கோடி ரூபாய் கடன் பெறவும், 51,971 கோடி ரூபாய் திருப்பிச் செலுத்தவும் திட்டமிட்டுள்ளது. பொது கணக்கின் கீழுள்ள பொறுப்புகளும் பொதுக் கடனுடன் சேர்த்துக் கணக்கிடப்படுகின்றன. 2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவு திட்டத்தில் மதிப்பிடப்பட்டிருந்த நிகர பொதுக்கடன் மற்றும் பொது கணக்கு பொறுப்புகள் 1,21,653 கோடி ரூபாய்,

2026-27 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளில் 1,20,964 கோடி ரூபாயாக உள்ளது. இதன் விளைவாக, 31 மார்ச் 2027ஆம் நாளில் நிலுவைப் பொறுப்புகள் 10,98,768 கோடி ரூபாயாக இருக்கும். இது 2026-27ல் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒட்டுமொத்த நிலுவை பொறுப்புகளின் விகிதம் 27.01 சதவீதமாகும். எனினும், இந்தத் தொகையில் சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டப்பணிகளுக்காக பெறப்பட்ட 9,523 கோடி ரூபாயும் அடங்கும். இது மத்தியப் பிரிவுத் திட்டமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஒன்றிய அரசின் கணக்குகளில் தேவையான புத்தகச் சரிகட்டல்கள் மேற்கொள்ளப்படும்போது, பொதுக் கடன் 9,523 கோடி ரூபாய் குறையும். மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒட்டுமொத்த நிலுவை பொறுப்புகளின் விகிதமானது 2027-28ல் 26.57 சதவீதமாகவும், 2028-29ல் 26.10 சதவீதமாகவும், மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், தனது நிதி ஒருங்கிணைப்பு வழித்திட்டத்தின் ஒரு பகுதியாக மாநிலம் கடன் நிலைத்தன்மையைப் பேண இலக்கு கொண்டுள்ளது.

## VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி, நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 63.57 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 5.04 சதவீதமாகவும் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி, மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 23.46 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 1.86 சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

முந்தைய அரசின் நிர்வாகக் குறைபாடுகளில் ஏற்பட்ட கடன் சுமையினால் மாநிலத்தின் நிதிநிலை தற்போது, நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போதிலும், இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் (MTFP) அடுத்த மூன்று ஆண்டுகளில் நிதிச் சமநிலையையும் அமைப்பு ரீதியான வலிமையையும் மீட்டெடுப்பதற்கான ஒரு தீர்க்கமான, எதிர்காலத்தை நோக்கிய பாதையை அமைக்கிறது. உயர்நிலை வருவாய் மேம்பாட்டு குழு மற்றும் செலவின சீர்திருத்தக் குழு ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ், வருவாய் கசிவுகளை முறையாக அடைக்கவும், செலவினங்களைச் சீரமைக்கவும், மக்கள் நலச் சேவைகளை மேம்படுத்தவும் அரசு ஒரு சீரிய செயல்திட்டத்தை

வகுத்து வருகிறது. முக்கியமாக, இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது, தற்போதைய நிநிலை மேம்பாட்டை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அடுத்த 2 ஆண்டுகளில் தூய்மையான, வெளிப்படையான, மேம்பட்ட ஆட்சியின் மூலம் வளர்ச்சியை எதிர்நோக்கி நிதிப்பற்றாக்குறையை கட்டுப்படுத்தும் வகையில் வகுக்கப்பட்டுள்ளது. வருவாய் ஆதாரங்களை திறம்பட பெருக்கி, வீண்செலவுகளை குறைப்பதன் மூலம் பொதுக் கடன்களை கட்டுக்குள் கொண்டு வரும். ஆழமான நிறுவன வலிமை, சிறப்பான தொழில் சூழல் மற்றும் துடிப்பான மனிதவளத்தைக் கொண்டுள்ள தமிழ்நாடு, இத்தகைய சீரமைப்பு நடவடிக்கைகளின் மூலம் நீடித்த பொருளாதார ஆரோக்கியத்தைப் பெற்று, தொலைநோக்குப் பார்வை கொண்ட, சீரான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழும்.

*********

# அட்டவணை – இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

(ரூபாய் கோடியில்)

| ஆகஸ்ட்- 2026 | 2024-2025 கணிப்புகள் | 2024-2025 கணக்குகள் | 2025-2026 கணிப்புகள் | 2025-2026 திருத்த மதிப்பீடு | 2026-2027 கணிப்புகள் | 2026-2027 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2027-2028 கணிப்புகள் | 2028-2029 கணிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் வரவுகள் | **3,11,239** | **2,82,829** | **3,41,852** | **3,09,698** | **3,44,575** | **3,50,027** | **3,95,386** | **4,46,803** |
| மாநிலத்தின் சொந்த வருவாய் | **2,37,659** | **2,13,828** | **2,58,665** | **2,32,806** | **2,57,283** | **2,54,575** | **2,88,546** | **3,27,138** |
| வரி | 2,13,795 | 1,80,225 | 2,26,401 | 2,06,540 | 2,29,579 | 2,26,740 | 2,58,483 | 2,94,671 |
| வரி அல்லாதவை | 23,864 | 33,603 | 32,264 | 26,265 | 27,704 | 27,835 | 30,062 | 32,467 |
| ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படுபவை | **73,580** | **69,001** | **83,187** | **76,892** | **87,292** | **95,452** | **1,06,840** | **1,19,665** |
| பங்கிடப்பட்ட வரிகள் | 48,331 | 52,492 | 57,965 | 56,819 | 62,531 | 62,531 | 71,285 | 81,265 |
| உதவி மானியம் | 25,249 | 16,509 | 25,223 | 20,073 | 24,762 | 32,922 | 35,555 | 38,400 |
| மூலதன வரவுகள் | | 43 | | 15 | 17 | 17 | | |
| பொதுக் கடன் வரவுகள் | 1,35,365 | 1,45,203 | 1,49,452 | 1,67,959 | 1,70,044 | 1,73,445 | 1,87,173 | 2,07,676 |
| | | | | | | | | |
| வட்டியல்லாத செலவுகள் | **3,45,394** | **3,22,142** | **3,79,294** | **3,64,579** | **3,87,864** | **3,93,181** | **4,38,894** | **4,92,317** |
| சம்பளங்கள் (கல்விக்கான மானியங்கள் உட்பட) | 84,964 | 78,387 | 91,726 | 85,008 | 94,378 | 91,032 | 1,01,046 | 1,12,161 |
| ஓய்வூதியங்களும் ஓய்வுகாலப் பலன்களும் | 39,931 | 36,191 | 41,430 | 39,990 | 45,323 | 41,846 | 46,030 | 50,633 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 17,574 | 15,989 | 15,614 | 18,895 | 18,735 | 19,698 | 21,274 | 22,976 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 1,25,426 | 1,36,347 | 1,40,254 | 1,65,839 | 1,56,108 | 1,74,494 | 1,91,219 | 2,09,780 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 50 | 30 | 50 | 44 | 50 | 50 | 52 | 55 |
| மூலதன ஒதுக்கீடு | 64,683 | 47,108 | 66,754 | 51,443 | 59,562 | 56,985 | 68,382 | 83,426 |
| நிகரக் கடன் வழங்கல் | 12,765 | 8,089 | 23,466 | 3,360 | 13,708 | 9,075 | 10,891 | 13,287 |
| பொதுக் கடன் செலவுகள் | 41,134 | 40,684 | 41,134 | 47,323 | 52,079 | 51,971 | 53,967 | 59,906 |
| நிதிக் குறியீடுகள் | | | | | | | | |
| முதன்மை உபரி(+) / பற்றாக்குறை (–) | **-34,155** | **-39,269** | **-37,442** | **-54,867** | **-43,272** | **-43,136** | **-43,508** | **-45,515** |
| வட்டி செலுத்துதல் | 61,877 | 61,725 | 70,877 | 69,140 | 78,677 | 78,683 | 89,698 | 1,02,256 |
| மொத்த வருவாய் வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | 19.88% | 21.82% | 20.73% | 22.33% | 22.83% | 22.48% | 22.69% | 22.89% |
| வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–) | **-18,583** | **-45,840** | **-18,098** | **-69,219** | **-48,697** | **-55,775** | **-53,933** | **-51,058** |
| பொதுக் கடன் நிகரம் | **94,231** | **1,04,518** | **1,08,318** | **1,20,637** | **1,17,965** | **1,21,474** | **1,33,206** | **1,47,770** |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (–)% | -5.97% | -16.21% | -5.29% | -22.35% | -14.13% | -15.93% | -13.64% | -11.43% |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–)யில் வருவாய் உபரி(+) / பற்றாக்குறை (–)% | 19.35% | 45.23% | 16.71% | 55.82% | 39.93% | 45.79% | 40.49% | 34.55% |
| எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றம் | | 350 | | | | | | |
| நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) | **-96,031** | **-1,01,344** | **-1,08,318** | **-1,24,007** | **-1,21,950** | **-1,21,819** | **-1,33,206** | **-1,47,770** |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதி உபரி(+) / பற்றாக்குறை(–) | -3.00% | -3.25% | -2.96% | -3.48% | -3.00% | -3.00% | -2.87% | -2.80% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | **32,00,928** | **31,15,998** | **36,56,757** | **35,67,818** | **40,67,312** | **40,67,312** | **46,36,736** | **52,85,879** |

அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.